
328

டத்திட்டம்- 2017

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## தரம் - 8



பரீட்சை முன்னோடி செயல்நூல்

தொகுப்பு

**இ. க. சிவஞானசுந்தரம்,**

M.A(cey), B.A(cey), P.G. Dip.in. Edu.,

ஆசிரியர் கல்வியியல் ஆலோசகர், (ஓய்வு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No. 894.811
Acc No 328

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

LENDING
ARASADY PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழியும் இலக்கியமும்

புதிய பாடத்திட்டம்

## தரம் - 8

- பாடங்கள் விளக்கங்களுடன் தரப்பட்டுள்ளன.
- மேலதிகப் பாடல்கள், கதைகள், சிந்திக்கும் செய்திகள், மொழித்திறன், இலக்கணம், பயிற்சிகள், பாடசாலை மதிப்பீட்டுப் பரீட்சை உள்ளடக்கப்பட்டுள்ளன.

Arasady Public Library
Municipal Council
Batticaloa

தொகுப்பு

**இ. க. சிவஞானசுந்தரம் M.A**

M.A (cey), P.G. Dip in Ed., B.A (cey)

ஆசிரியர் கல்விவள ஆலோசகர் (ஓய்வு)

வெளியீடு

**இனிய தென்றல் பப்ளிக்கேஷன்**

இல. 135, கனல்பாங் வீதி, கொழும்பு - 06

T.P No : 011-2360239, 072 - 2875625

Class No
Acc No 328

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரப் பட்டியல்


நூல் : **தமிழ்மொழியும் இலக்கியமும்**
**தரம் - 08**

வகை : தமிழ்மொழி - செயல்நூல்



ஆசிரியர் : **இ. க. சிவஞானசுந்தரம்,M.A**
ஆசிரியர் கல்விவள ஆலோசகர் (ஓய்வு)



பதிப்புரிமை : ஆசிரியருக்கே
(இந்நூல் பதிவு செய்யப்பட்டது)



முதற் பதிப்பு : 25 தை 2017

வெளியீடு : இனிய தென்றல் பப்ளிக்கேஷன்,
இல. 135, கனல் பாங் வீதி,
கொழும்பு - 06.
தொலைபேசி :- 011-2360239, 072-2875625

கணனிப் பதிவு : திருமதி. எஸ்.தில்ருக் பிரசாந்த,
வெள்ளவத்தை, கொழும்பு - 06.

நூல் அச்சமைப்பு : தேவி பிறின்ரஸ்
கொழும்பு - 13.

**ISBN : 978 - 955 - 7317 - 01 - 4**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

**"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"** என்று கூறினார் ஒளவைப் பிராட்டியார். கல்வி என்பது உயர்பேறாகும். இலங்கை, கல்வி அமைச்சினால் கொண்டு வரப்பட்ட புதிய கல்வி மறுசீர் அமைப்புக்கு ஏற்ப **தமிழ்மொழியும் இலக்கியமும், தரம் - 08**. பாடநூல் 2017 ல் வெளியிடப் பட்டுள்ளது. அரச நூலில் காணப்படும் ஒவ்வொரு பாடங்களையும் எமது அன்புச் செல்வங்கள் இலகுவில் விளங்கிக் கொள்வதற்கு ஏற்றதாக இச் செயல்நூல் வெளியிடப்படுகின்றது. மாணவர்கள் தாமாகவே இயங்க வேண்டும். ஆசிரியர்கள் அவர்களுக்கு வழிகாட்டுபவர்களாகச் செயற்பட வேண்டும் என்ற புதிய கல்விச் சித்தாந்தங்களுக்கு அமைய மாணவர் விருப்புடன் ஈடுபடக் கூடிய கல்விச் செயற்பாடுகள் இந்நூலில் புகுத்தப் பட்டுள்ளன.

கல்வி என்பது அர்த்தமுள்ளதாகவும், வாழ்க்கையோடு இணைந்த தாகவும், மாணவர் உளங்கொளத் தக்கதாகவும் அமையவேண்டும். அவ் வகையில் பல்வேறு செயற்பாடுகள் மூலம் மாணவரை உற்சாகத்துடன் இயங்க வைக்க, வகுப்பறை, வீட்டுச் செயற்பாடுகளுக்கு உதவுமுகமாக இச் செயல்நூல் வெளிக் கொணரப்படுகிறது. புதிய மறுசீரமைப்புச் சித்தாந் தங்களைக் கற்ற, கற்பித்த, மதிப்பிட்ட அறிவுடன்; பாட ரீதியான அறிவும் இந்நூலை இயன்றளவு மாணவரிடம் இருந்து உச்சப் பயன்பாட்டைப் பெறும் வகையில் தயாரிக்க எனக்கு உதவிற்று எனக் கூறலாம்.

இதுவரை காலமும் வெளியிடப்பட்ட தமிழ்மொழி சார்ந்த செயல் நூல்கள், வினாவிடைகள், ஆய்வுநூல்கள் என்பவற்றை உளமார விரும்பி ஏற்ற மாணவர் சமூகம், ஆசிரியப் பெருந்தகைகள் இந்நூலையும் வரவேற்று மகிழ்ந்து பெருமதிப்புத் தருவார்கள் என நிச்சயம் நம்புகிறேன்.

இந்நூலை விரும்பி ஏற்று வெளியீடு செய்த **"இனிய தென்றல் பப்ளிகேஷன்" கொழும்பு - 06.** நிறுவனத்தார், அச்சுப் பொறியில் அச்சேற்றி அழகுற நூல் வடிவாக்கிய **தேவி பிறின்ரஸ், கொட்டாஞ் சேனை.** உரிமையாளர், உறுப்பினர்கள், கணனியில் பொறித்து உதவிய **திருமதி. தில்ருக் பிரசாந்த கொழும்பு - 06.** அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூலை உருவாக்கம் செய்வதில் முக்கிய பங்கு வகித்த உசாத்துணை நூல் ஆசிரியர்களுக்கும், அந்நூல்கள் வெளியிட்ட நிறுவனத்தாருக்கும் எனது சிரம் தாழ்ந்த நன்றிகள் உரித்தாகுக.

**மாணவர்கள் கலையாத கல்வியும், குலையாத வாழ்வும் பெற்று வியத்தகு முன்னேற்றம் அடைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.**

ஆசிரியர்,

**இ.க. சிவஞானசுந்தரம், எம்.ஏ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

01. தமிழ் எழுத்துக்கள்............01 - 08
02. நாட்டுப்புறக் கதைகள்............09 - 22
03. கூண்டிற் கிளி............23 - 32
04. ஒரு பாட்டுடையான்............33 - 44
05. பறவைகளின் இசைவாக்கம்............45 - 52
06. முயற்சி திருவினையாக்கும்............53 - 61
07. வாழ்வதற்காக வாசி............62 - 71
08. பேராசிரியர் ம.மு.உவைஸ்............72 - 80
09. பசிப்பிணி மருந்து............81 - 92
10. ஆக்கிமிடீசு............94 - 106
11. நாடகமே உலகம்............107 - 118
12. சொல்லின் இசை............119 - 129
13. சுதந்திர கீதம்............130 - 135
14. பாலித்திட வேண்டுமம்மா............136 - 151
15. உயிர் இரக்கம்............152 - 158
16. விநோதக் கனவு............159 - 164
17. எலிப்பாட்டு............165 - 178
18. நீரின்றி அமையாது உலகு............179 - 186
19. குமணன் நாடகம்............187 - 193
20. தேனீயும் குளவியும்............194 - 201
21. அடக்கம் உடைமை............202 - 210
22. மலையக நாட்டார் பாடல்கள்............211 - 226
23. அலகுப் பரீட்சைகள்............227 - 275
24. வினாக்களுக்கான விடைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் எழுத்துக்கள்

தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்கள் **247** ஆகும். அவை நான்கு வகைப்படும்.

1. **உயிர் எழுத்துக்கள்**
2. **மெய் எழுத்துக்கள்**
3. **உயிர்மெய் எழுத்துக்கள்**
4. **ஆய்த எழுத்து**

## 1. உயிர் எழுத்துக்கள்

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ - **12**

## 2. மெய் எழுத்துக்கள்

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் - **18**

## 3. உயிர்மெய் எழுத்துக்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | + | அ | - | க | க் | + | எ | - | கெ |
| க் | + | ஆ | - | கா | க் | + | ஏ | - | கே |
| க் | + | இ | - | கி | க் | + | ஐ | - | கை |
| க் | + | ஈ | - | கீ | க் | + | ஒ | - | கொ |
| க் | + | உ | - | கு | க் | + | ஓ | - | கோ |
| க் | + | ஊ | - | கூ | க் | + | ஔ | - | கௌ |

இவை போலவே எல்லா உயிர்மெய் எழுத்துக்களும் தோற்றம் பெறும் **உயிர் 12 x மெய் 18 = 216 உயிர்மெய் எழுத்துக்கள்.**

ங் + அ - ங, ச் + அ - ச, ஞ் + அ - ஞா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. ஆய்த எழுத்து

∴ இதுபோல் மூன்று புள்ளி வடிவாக இவ் எழுத்து அமையும் - 1

**தமிழ்மொழியின் மொத்த எழுத்துக்கள்**

| | |
|---|---|
| உயிர் எழுத்துக்கள் | 12 |
| மெய் எழுத்துக்கள் | 18 |
| உயிர்மெய் எழுத்துக்கள் | 216 |
| ஆய்த எழுத்து | 01 |
| | 247 எழுத்துக்கள் |

## 5. உயிர் எழுத்துக்களின் வகை

உயிர் எழுத்துக்கள் ஒலி வகையால் இரண்டு வகைப்படும். அவை :

1. **குறில் எழுத்துக்கள் - 5**
2. **நெடில் எழுத்துக்கள் - 7**

❖ குறுகி ஒலிக்கும் எழுத்துக்கள் **குறில் எழுத்துக்கள்** ஆகும்.

அ, இ, உ, எ, ஒ - 5

❖ நீண்டு ஒலிக்கும் எழுத்துக்கள் **நெடில் எழுத்துக்கள்** ஆகும்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ - 7

## 6. மெய் எழுத்துக்களின் வகைகள்

1. **வல்லெழுத்துக்கள் :** க், ச், ட், த், ப், ற் - 6
2. **மெல்லெழுத்துக்கள் :** ங், ஞ், ண், ந், ம், ன் - 6
3. **இடையெழுத்துக்கள் :** ய், ர், ல், வ், ழ், ள் - 6

**(வல்லினம், மெல்லினம், இடையினம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ தமிழ் எழுத்துக்கள் மொத்தம் இருநூற்று நாற்பத்தேழு எவ் விதமாக வந்தது.

## தமிழ் எழுத்து அட்டவணை

**தமிழ் எழுத்து - 247**

முதலெழுத்து - 30

| | | | |
|---|---|---|---|
| உயிரெழுத்து | 12 | குற்றெழுத்து | 5 |
| | | நெட்டெழுத்து | 7 |
| மெய்யெழுத்து | 18 | வல்லெழுத்து | 6 |
| | | மெல்லெழுத்து | 6 |
| | | இடையெழுத்து | 6 |

சார்பெழுத்து - 217

| | | | |
|---|---|---|---|
| உயிர்மெய் யெழுத்து | 216 | உயிர்மெய்க் குற்றெழுத்து | 90 |
| | | உயிர்மெய் நெட்டெழுத்து | 126 |
| ஆய்தம் | 1 | ஆய்தம் | 1 |
| 247 | 247 | | 247 |

❖ உயிரும் மெய்யுமாகிய முதலெழுத்துக்களைச் சார்ந்து வந்தமையால் சார்பெழுத்து எனப் பெயராயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிக் குறிப்புகள்

## அடுக்குத் தொடர்

| | |
|---|---|
| சின்னசின்ன | வண்ணவண்ண |
| பெரியபெரிய | கரியகரிய |
| விடியவிடிய | நேர்நேர் |
| மேலேமேலே | ஐயோஐயோ |

## அடுக்கிடுக்குத் தொடர்

| | |
|---|---|
| சின்னஞ்சிறிய | நடுநடுங்கி |
| பென்னம்பெரிய | பதைபதைத்து |
| கன்னங்கரிய | பட்டப்பகல் |
| தன்னந்தனி | கொதிகொதித்து |
| வெள்ளைவெளேர் | பச்சைப்பசேர் |

## இணைமொழித் தொடர்

| | | |
|---|---|---|
| ஆறஅமர | பயிர்பச்சை | கரடுமுரடு |
| தில்லுமுல்லு | சுணைமணை | ஏழைஎளியவர் |
| முடிவுகாலம் | ஆய்ந்துஓய்ந்து | வற்றிவரண்டு |
| வீடுவாசல் | சப்புச்சவறு | கோணல்மாணல் |
| எதிரும்புதிரும் | சீறிச்சினந்து | திருகுதாளம் |
| ஈவுஇரக்கம் | ஆதிஅந்தம் | குன்றும்குழியும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருஞ் சொற்கள்

| | | |
|---|---|---|
| ஊழிக்காலம் | விடுதலை முரசு | இரும்புத்திரை |
| வெந்தபுண் | இதயகீதம் | உல்லாசபுரி |
| குறுகுறு நடந்து | இலைக்கஞ்சி | வாழ்வின்வசந்தம் |
| இருண்ட கண்டம் | பனிமழை | கலங்கரை விளக்கம் |
| வற்றாதவளநதி | மனக்கோட்டை | கடிமணம் |

## உவமைத் தொடர்

அடியற்ற மரம் போல
அணை கடந்த வெள்ளம் போல
அனலில் இட்டப்பட்ட மெழுகு போல
அத்தி பூத்தாற் போல
ஆனைவாய்க் கரும்பு போல
இலவு காத்த கிளி போல
உயிரும் உடலும் போல
உள்ளங்கை நெல்லிக்கனி போல
ஊமை கண்ட கனவு போல
ஓடும் புளியம்பழமும் போல
ஏட்டுச்சுரக்காய் போல
ஒளி கண்ட இருளைப் போல
குரங்கின்கைப் பூமாலை போல
சூரியனைக் கண்ட தாமரை போல
உருணி நீர் நிறைந்தாற் போல
பசுமரத்து ஆணி போல
பாம்பும் கீரியும் போல
விழலுக்கு இறைந்த நீர் போல

## பழமொழிகள்

வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும்.
பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு.
ஆனைக்கும் அடி சறுக்கும்.
மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே.
தீட்டிய மரத்தில் கூர் பார்க்காதே.
எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிவளம்

மாணவச் செல்வங்கள் தங்கள் மொழி அறிவை வளர்த்துக் கொள்வதற்காக அலகுப் பரீட்சைகளுக்கு மேலதிகமாக இம் மொழிவளப் பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. கற்றுப் பயன் பெறுங்கள்.

## ஒத்த பொருட் சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அறம் | - | தர்மம் | மடந்தையர் | - | மகளிர் |
| அழல் | - | நெருப்பு | வெளவுதல் | - | அபகரித்தல் |
| அமருதல் | - | இருத்தல் | கடினம் | - | வன்மை |
| அடவி | - | காடு | வேழம் | - | யானை |
| ஆழி | - | கடல் | தாரகை | - | நட்சத்திரம் |
| ஆசனம் | - | இருக்கை | மறு | - | மாசு |
| ஆதரவு | - | அரவணைப்பு | புலர்தல் | - | விடிதல் |
| இன்னல் | - | துன்பம் | சித்திக்கும் | - | கைகூடும் |
| ஐயம் | - | பிச்சை | மகிழ்ச்சி | - | உவகை |
| உபதேசம் | - | போதனை | முகவரி | - | விலாசம் |
| உரத்து | - | பலமாக | பாராட்டுதல் | - | புகழ்தல் |
| உத்தரவு | - | அனுமதி | கடிதம் | - | முடங்கல் |
| ஊறு | - | துன்பம் | கற்பித்தல் | - | படிப்பித்தல் |
| வர்க்கம் | - | இனம் | எடுப்பு | - | கம்பீரம் |
| சீடர் | - | மாணாக்கர் | பயிலுதல் | - | கற்றல் |
| பாரம் | - | சுமை | உயர்வு | - | மேலோங்கல் |
| வெப்பம் | - | சூடு | அமைதி | - | நிசப்தம் |
| பெருமை | - | புகழ் | பெரியவர் | - | மூத்தோர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பொருட் சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அகம் | - | புறம் | விருப்பு | - | வெறுப்பு |
| ஆதரவு | - | அநாதரவு | மலை | - | மடு |
| ஆக்கம் | - | கேடு | கேடு | - | ஆக்கம் |
| இறப்பு | - | பிறப்பு | பெருமை | - | சிறுமை |
| இரகசியம் | - | பரகசியம் | நீதி | - | அநீதி |
| இல்லறம் | - | துறவறம் | காய்தல் | - | உவத்தல் |
| இளமை | - | முதுமை | சுத்தம் | - | அசுத்தம் |
| இசை | - | வசை | நம்பிக்கை | - | அவநம்பிக்கை |
| ஈதல் | - | ஏற்றல் | சுமங்கலி | - | அமங்கலி |
| உதயம் | - | மறைவு | நாகரிகம் | - | அநாகரிகம் |
| உருவம் | - | அருவம் | ஆக்கல் | - | அழித்தல் |
| உண்மை | - | பொய் | மேடு | - | பள்ளம் |
| ஊடல் | - | கூடல் | புராதனம் | - | நவீனம் |
| ஏற்றம் | - | இறக்கம் | வாதி | - | பிரதிவாதி |
| ஏகம் | - | அநேகம் | நீட்டம் | - | குறுக்கம் |
| ஐது | - | செறிவு | பாலர் | - | விருத்தர் |
| ஒற்றுமை | - | வேற்றுமை | திண்மம் | - | திரவம் |
| சுலபம் | - | கடினம் | மலர்ச்சி | - | வாட்டம் |
| வெற்றி | - | தோல்வி | மென்மை | - | வன்மை |
| குறைவு | - | நிறைவு | மங்கலம் | - | அமங்கலம் |
| மரியாதை | - | அவமரியாதை | விவேகம் | - | அவிவேகம் |
| பண்டிதர் | - | பாமரர் | வீரன் | - | கோழை |
| சிற்றூர் | - | பேரூர் | நட்பு | - | பகை |
| தமர் | - | பிறர் | காய்தல் | - | உவத்தல் |
| பாலர் | - | விருத்தர் | ஆரோகணம் | - | அவரோகணம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்பாற் சொற்கள்

அப்பன் - அம்மை
அரசன் - அரசி
அவன் - அவள்
அழகன் - அழகி
அடியான் - அடியாள்
அரக்கன் - அரக்கி
ஆண்டான் - ஆண்டாள்
இடையன் - இடைச்சி
இயக்கன் - இயக்கி
ஈசுவரன் - ஈஸ்வரி
உத்தமன் - உத்தமி
உழவன் - உழத்தி
எளியன் - எளியள்
ஐயன் - ஐயை
ஒருவன் - ஒருத்தி
வலைஞன் - வலைஞி
செம்படவன் - செம்படச்சி
செல்வன் - செல்வி
தாசன் - தாசி
திருவாளன் - திருவாட்டி
பகவான் - பகவதி
பாடகன் - பாடகி
புதல்வன் - புதல்வி
மணமகன் - மணமகள்
மூடன் - மூடி
புண்ணியவான் - புண்ணியவதி

புனையன் - புனைச்சி
கணக்கன் - கணக்கிச்சி
கணவன் - மனைவி
கறுப்பன் - கறுப்பி
காதலன் - காதலி
காமுகன் - காமுகை
குமாரன் - குமாரத்தி, குமாரி
குறவன் - குறத்தி
கொல்லன் - கொல்லிச்சி
சகோதரன் - சகோதரி
சூரன் - சூரி
தச்சன் - தச்சிச்சி
கள்ளன் - கள்ளி
கிழவன் - கிழத்தி, கிழவி
குமரன் - குமரி
குயவன் - குயத்தி
கூனன் - கூனி
கோமான் - கோமாட்டி
சுந்தரன் - சுந்தரி
வீரன் - வீரி, வீராங்கனை
புத்திரன் - புத்திரி
மருமகன் - மருமகள்
முடவன் - முடத்தி
வேடன் - வேடுவிச்சி
வேலைக்காரன் - வேலைக்காரி
தோழன் - தோழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. நாட்டுப்புறக் கதைகள்

## கொடியது யாது?



ஔவையார் ஒரு பெண் புலவர். அவர் இனிய பாடல்களைப் பாடியுள்ளார். அவர் அக்காலத்தவரால் நன்கு மதிக்கப்பட்டார். ஔவை யார், முருகப் பெருமான்மேல் மிகுந்த பக்தியுடையவர். ஒருமுறை முருகப் பெருமான், ஔவையார் முன்தோன்றி உங்கள் மூலம் சில உண்மைகளை உலகத்தவர்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன் எனக்கூறி நான்கு வினா களை ஔவையாரிடம் வினவினார். அவை வருமாறு:

**இனியது எது?** **அரியது எது?**
**பெரியது எது?** **கொடியது எது?**

என்பன அவ்வினாக்கள். இவ்வினாக்களுக்கு ஒவ்வொன்றாக ஔவையார் விடை கூறினார். அவற்றுள் கொடியது யாது? என்ற வினாவுக்கு அவர் கூறிய விடைகளை இங்கே நீங்கள் படியுங்கள்.

**''கொடியது கேட்கின் நெடிய வெவ்வேலோய்**
**கொடிது கொடிது வறுமை கொடிது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனிலும் கொடிது இளமையில் வறுமை
அதனிலும் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனிலும் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனிலும் கொடிது இன்புற அவள் கையால்
உண்பது தானே'' என்றார்.

**01. மேலே தரப்பட்டுள்ள ''கொடியது யாது?'' என்ற பகுதியை அடிப்படையாகக் கொண்டு கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

அ. வறுமையிலும் கொடியது எது?

..............................................................................................

ஆ. கொடுமையான நோயிலும் கொடியது எது?

..............................................................................................

இ. எல்லாவற்றிலும் மிகக் கொடியது எது?

..............................................................................................

ஈ. ஔவையாரைப் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

**02. அடைப்புக்குள் உள்ள பொருத்தமான சொல்லைத் தெரிந்தெடுத்து இடைவெளிகளை நிரப்புங்கள்.**

அ. நிசார் இருதய நோயினால் ................................ துடிதுடித்தான்.
**(அணுஅணுவாக, விறுவிறுப்பாக)**

ஆ. .............................. பணத்தை வீசிப் படித்தபோதும் அவனால் கல்விச் செல்வத்தைப் பெற முடியவில்லை.
**(சலசலவென, கற்றைகற்றையாக)**

இ. இலங்கைத் தமிழ் நாடகங்களில் ...................... தன்மை குறைவாகவே காணப்படுகிறது. **(விறுவிறுப்பு, புறுபுறுப்பு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. குற்றமுள்ள நெஞ்சு ................... **(குறுகுறுக்கும், மளமளக்கும்)**

உ. இந்திர சித்துவின் இறப்புச் செய்தி கேட்ட இராவணன் .................. எனப் பற்களைக் கடித்தான். **(படபட, நறநற)**

**03. கீறிட்ட இடங்களில் அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் சரியானவற்றை வைத்து நிரப்புங்கள்.**

அ. ............................. நீரில் குளித்தேன். **(குளிர்ந்த, குழிர்ந்த)**

ஆ. பனையோலை ..................... யால் விசுக்கினேன். **(விசிறி, விசுரி)**

இ. எள்ளையும் ஏழாகப் .................... கொடுக்க வேண்டும் என்பர். **(பகுந்து, பகிர்ந்து)**

ஈ. நாணில் அம்பை .......................... எனத் துரோணர் கூறினார். **(ஏத்து, ஏற்று)**

உ. மக்களின் ............................... அறிந்து உதவ வேண்டும். **(தேவை, தேள்வை)**

ஊ. ஏனென்று ................. அப்பா. **(சொல்லுங்கள், சொல்லுங்கோ)**

**04. பின்வரும் சொற்களை உரியபடி தெரிந்து கீறிட்ட இடங்களை நிரப்புங்கள்.**

யாழ்ப்பாணம், மாரி, மரம், மைதானம், அம்பு, நாள், தலை, நடத்தல், இனிமை, கொம்பு, வெண்மை, இருத்தல்

| | | | |
|---|---|---|---|
| அ. | பொருட்பெயர் | ...................... | ........................... |
| ஆ. | இடப்பெயர் | ...................... | ........................... |
| இ. | காலப்பெயர் | ...................... | ........................... |
| ஈ. | சினைப்பெயர் | ...................... | ........................... |
| உ. | குணப்பெயர் | ...................... | ........................... |
| ஊ. | தொழிற்பெயர் | ...................... | ........................... |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருமானே நாயகமே !

அருளாளன் அன்புடையோன்
அல்லாஹுவின் கருணைப்
பெருங்கொடையாய் வந்துதித்த
பெருமானே நாயகமே!

ஒன்றி றிறைவன் ஒன்று குலம்
ஒன்றுநிறை என்றருளி
மன்பதைகள் பிணி நீக்கும்
மருந்தாகும் நாயகமே!

செங்கதிரும் தண்மதியும்
சேர்ந்து கையில் தந்திடினும்
என்கொள்கை விடமாட்டேன்
என்றுரைத்த நாயகமே!

சீனாவிற் சென்றேனும்
சீர்கல்வி பெறுகவெனத்
தேனான வாய்திறந்து
தெளிவூட்டும் நாயகமே!

பேராசிரியர் கா. அப்துல் கபூர், எம்.ஏ

05. மேலே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

அ. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கொள்கையில் உறுதியாக நிற்கும் சிறப்புத் தன்மை பாடலில் எவ்விதம் காட்டப்பட்டுள்ளது?

.......................................................................................................

.......................................................................................................

ஆ. கல்வியில் இன்றியமையாமையை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு வலியுறுத்தியுள்ளார்?

.......................................................................................................

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. பெருமான் நாயகம் (ஸல்) அவர்கள் எவ் அருளால் வந்து உதித்தார் எனப் பாடலில் கூறப்பட்டுள்ளது?

.............................................................................................................

.............................................................................................................

**06. பின்வரும் வாக்கியங்களில் உள்ள செயப்படுபொருளின் கீழ்க் கீறிடுங்கள்.**

அ. இக்பால் கவிதை புனைந்தார்.

ஆ. உன்னை நான் நம்புகிறேன்.

இ. இனிய பழங்களைச் சாப்பிடுவோம்.

ஈ. புதுப்புதுக் காட்சிகளை அவர்கள் கண்டனர்.

உ. யாரோ ஒருத்தி பொய் சொல்கிறாள்.

**07. கீழ்க்காணும் வாக்கியங்களுக்கு எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் கூறுங்கள்.**

அ. அந்தச் சிசுவைச் சாலமோன் ஏறிட்டுப் பார்த்தான்.

ஆ. சபையில் அதிகாரிகள் கூடியிருந்தனர்.

இ. அரசன் நீதி தவறாது தீர்ப்பு வழங்குவான்.

ஈ. காசை எடுத்தான் கடைக்காரன்.

உ. பாடல்களை இசைவாணர் பாடுகின்றார்.

| | எழுவாய் | பயனிலை | செயற்படுபொருள் |
|---|---|---|---|
| அ. | ........................ | ........................ | .............................. |
| ஆ. | ........................ | ........................ | .............................. |
| இ. | ........................ | ........................ | .............................. |
| ஈ. | ........................ | ........................ | .............................. |
| உ. | ........................ | ........................ | .............................. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. **பின்வரும் வாக்கியங்களில் உள்ள இடைவெளிகளில் 'நான்' அல்லது 'நீ' என்ற சொல்லைப் பொருத்தமாக எழுதுங்கள்.**

அ. .................................... பூங்காவுக்குச் சென்று ஓய்வெடுப்பேன்.

ஆ. நாளைக்குக் காலையில் ..................... நிச்சயம் வருவாயா?

இ. இரண்டு மணி தொடக்கம் ................................ உனக்காகக் காத்திருக்கிறேன்.

ஈ. கடுங்குளிரில் .................... நடுங்கினேன்; ஆனால் ..................... நடுங்காமல் இருக்கிறாய்.

உ. .................................. ஒருபோதும் பொய் சொல்லமாட்டாய்.

09. **பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.**

அ. கல்லெறிந்தோம் = .......................................

ஆ. மற்போர் = .......................................

இ. ஆட்பலம் = .......................................

ஈ. முன்னொரு = .......................................

உ. பாழ்ங்கிணறு = .......................................

ஊ. மலர்க்கொத்து = .......................................

10. **பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுங்கள்.**

அ. அரசு + ஆண்டான் = .......................................

ஆ. வாரி + எடுப்போம் = .......................................

இ. எல்லா + உலகமும் = .......................................

ஈ. இந்தியா + நாடு = .......................................

உ. புலமை + உண்டு = .......................................

ஊ. பெற்று + எடுத்தேன் = .......................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கீழ்வரும் பாடலைப் படித்தபின்பு தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

**''இறவாத புகழுடைய புதுநூல்கள்**
**தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்**
**மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்**
**சொல்வதிலோர் மகிமை இல்லை**
**திறமான புலமையெனில் வெளி நாட்டார்**
**அதை வணக்கம் செய்தல் வேண்டும்''**

(சுப்பிரமணிய பாரதியார்)

அ. பாரதியார் எவ்விதமான, எதனை இயற்றுதல் வேண்டும் என விரும்பினார்?

..........................................................................................

..........................................................................................

ஆ. **'இறவாத புகழுடைய புதுநூல்கள்'** என்ற தொடர் மூலம் நாம் விளங்கிக் கொள்ளும் கருத்து யாது?

..........................................................................................

..........................................................................................

இ. எதனைச் செய்வதனால் எமக்குச் சிறப்பு இல்லை எனக் கவிஞர் கூறுகிறார்?

..........................................................................................

..........................................................................................

ஈ. வெளிநாட்டவர் எமது ஆக்கத்தைக் கண்டு எப்பொழுது வணக்கம் செய்வர்?

..........................................................................................

..........................................................................................

**உ. பின்வரும் சொற்களுக்குரிய பொருளை எழுதுங்கள்.**

அ. இறவாத ........................ இ. இயற்றல் ........................

ஆ. மகிமை ........................ ஈ. புலமை ........................



Class No: 894.811
Acc No 328
Arasady Public Library
Municipal Council
Batticaloa
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. **கீழே தரப்பட்டுள்ள லகர, ழகர, ளகர வேறுபாட்டுக்கமைய (பேதங்களுக்கமைய) வாக்கியங்களை அமையுங்கள்.**

அ. அலகு : ..............................................................................................

அழகு : ..............................................................................................

அளகு : ..............................................................................................

ஆ. உலை : ..............................................................................................

உழை : ..............................................................................................

உளை : ..............................................................................................

இ. கலகம் : ..............................................................................................

கழகம் : ..............................................................................................

களகம் : ..............................................................................................

ஈ. வாலை : ..............................................................................................

வாழை : ..............................................................................................

வாளை : ..............................................................................................

13. **கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்கள் ஏவல் வாக்கியம் எனில் 'ஏ' எனவும் வியங்கோள் வாக்கியமெனில் 'வி' எனவும் அடைப்பினுள் எழுதுங்கள்.**

அ. அங்கே நில். (..................)

ஆ. கடிதம் எழுதுங்கள். (..................)

இ. ஐயனே! வரமொன்று தருக. (..................)

ஈ. அதனை உண்ணாதே. (..................)

உ. கடவுளே! அவனைக் காப்பாற்று. (..................)

ஊ. அதைச் செய்யாதே. (..................)

எ. பாடலைப் பாடுங்கள். (..................)

ஏ. செந்நெல் விளைக செந்தமிழ் ஓங்குக. (..................)



Arasady Public Library Municipal Council Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. **அடைப்பிலுள்ள பொருத்தமான சொற்களைத் தெரிந்தெடுத்து இடைவெளிகளை நிரப்புங்கள்.**

| இதயஒளி | நவீனப்படுத்திய | பரந்த எண்ணம் | நாகரிகத்தின் | வன்மை |
|---|---|---|---|---|

அ. இருபதாம் நூற்றாண்டில் தமிழ்மொழியை ................. பெருமை பாரதியாரையே சாரும்.

ஆ. நவீன ......................... முக்கிய சின்னம் பத்திரிகைத் தொழில் ஆகும்.

இ. 'இந்தியா' என்ற பத்திரிகை வாயிலாகப் பாரதியின் .................... மக்களைச் சென்றடைந்தது.

ஈ. பாரதியின் எழுத்து ..................... மக்களிடையே பத்திரிகைக்கான செல்வாக்கை அதிகரித்தது.

உ. பத்திரிகை எழுதுவோனுக்குப் ............................ இருக்க வேண்டும்.

## அலகுப் பரீட்சை -1
## கட்டுரை, பாட்டுக்கு விளக்கம்

01. **பின்வரும் தலைப்புகளில் ஒன்றைப் பற்றிக் கட்டுரை எழுதுங்கள்.**

அ. வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும்.

ஆ. நான் விரும்பும் பெரியார்.

இ. பெரியோருக்கு உதவுவோம்.

ஈ. நன்றி மறப்பது நன்றல்ல.

உ. நான் விண்வெளிக்குச் சென்றால்.

**(பயிற்சிக் கொப்பியில் எழுதவும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. கீழே தரப்பட்டுள்ள பாடலுக்குப் பொருள் எழுதுங்கள். தரப் பட்டுள்ள வினாவுக்கு விடையும் எழுதுங்கள்.

**''மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்**
**எவ்வெவர் தீமையு மெதிர் கொள்ளார் - செவ்வி**
**அருமையு நோக்கார வமதிப்புங் கொள்ளார்**
**கருமமே கண்ணாயினார்.''** - ஔவையார் -

அ. பாட்டுக்குப் பொருள் எழுதுக.

..............................................................................................

..............................................................................................

ஆ. கருமமே கண்ணாயினாரின் செயல்கள் எவ்வாறு அமையுமெனக் கூறப்பட்டுள்ளன?

..............................................................................................

..............................................................................................

16. கீழே தரப்பட்டுள்ள சதுரங்களை உரிய விடை கொண்டு நிரப்புங்கள்.

| | | |
|---|---|---|
| அ. | குழந்தைகள் விரும்பிக் கேட்கும் **'தை'** | ☐☐ |
| ஆ. | மழைக்குப் பிடிக்கும் **'டை'** | ☐☐ |
| இ. | கோழி போடும் **'டை'** | ☐☐☐ |
| ஈ. | உரலில் இடிக்கும் **'கை'** | ☐☐☐☐ |
| உ. | நோயை உண்டாக்கும் **'பை'** | ☐☐☐ |
| ஊ. | ஆச்சி சுட்ட **'டை'** | ☐☐ |
| எ. | வாழை போட்ட **'லை'** | ☐☐ |
| ஏ. | வாகனம் சென்ற **'தை'** | ☐☐ |
| ஐ. | பொருட்கள் வேண்டும் **'டை'** | ☐☐ |
| ஒ. | மழை காலத்தில் பெருகும் **'டை'** | ☐☐☐ |

(விடைகள் பக்கம் 71 இல் உள்ளது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. பாடப்புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு கீழேயுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

## I. வியாபாரியின் கோபம்

அ. வியாபாரியின் மகன் தனது சாமர்த்தியத்தை வெளிப்படுத்தச் செய்த செயல் என்ன?

........................................................................................................................

........................................................................................................................

ஆ. வியாபாரி தன் மகன்மீது ஏன் கோபமடைந்தான்?

........................................................................................................................

இ. வியாபாரியின் குணப்பண்பு இரண்டு தருக.

........................................................................................................................

........................................................................................................................

## II. இரண்டு தம்பிகள்

ஈ. கல்யாண வீட்டுத் தம்பி, இழவு வீட்டுத் தம்பி என்ற பெயர்கள் எக் காரணத்தால் ஏற்பட்டது?

........................................................................................................................

........................................................................................................................

உ. இழவு வீட்டினுள் புகுந்த அண்ணன் ஏன் தண்டிக்கப்பட்டான்?

........................................................................................................................

........................................................................................................................

ஊ. கல்யாண வீட்டுக்குப் போன தம்பி எக்காரணத்தால் தண்டிக்கப் பட்டான்?

........................................................................................................................

........................................................................................................................

எ. தந்தை, தனது மகன்மாருக்கு எவ்விதம் புத்திமதி கூறினார்?


........................................................................................................................

ஏ. 'இரண்டு தம்பிகள்' என்ற கதை மூலம் கிடைத்த படிப்பினை என்ன?

........................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**18. மேலே தரப்பட்டுள்ள அட்டவணையை ஆதாரமாகக் கொண்டு கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

அ. மெய்யெழுத்தின் இரு வகைகளும் எவை?

.................................................................................................

ஆ. முதல் எழுத்தின் இரு பிரிவுகளும் எவை?

.................................................................................................

இ. மெய்யெழுத்தின் மூன்று வகைகளும் யாவை?

.................................................................................................

ஈ. உயிர் எழுத்தின் இரு பிரிவுகளும் எவை?

.................................................................................................

உ. சார்பெழுத்தின் இரு வகைகளும் யாவை?

.................................................................................................

ஊ. பின்வருவன எத்தனை எழுத்துக்கள்?

உயிர் எழுத்து - ...................... மெய்யெழுத்து - ...................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. தரப்பட்டுள்ள பாடலில் உள்ள உயிர்எழுத்துக்கள், குறில், நெடில் என இனங் காண்க.

**ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல**
**ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்**
**ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்**
**ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.**

குறில் ........................................ நெடில் ........................................

20. பாடலிலுள்ள மெய்யெழுத்துக்களை இனங்காண்க.

ந், ..............................................................................................

21. இனங்கண்ட எழுத்துக்களை வல்லினம், இடையினம், மெல் லினம் என வகைப்படுத்துக.

வல்லினம் : ........................................................................
மெல்லினம் : ........................................................................
இடையினம் : ........................................................................

22. இனம் கண்ட உயிரெழுத்துக்களையும், மெய்யெழுத்துக் களையும் பயன்படுத்தி உயிர்மெய்யெழுத்துக்களை ஆக்குக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ந் | + | அ | - | ந | ம் | + | உ | - | மு |
| ந் | + | ஆ | - | நா | ம் | + | ஊ | - | மூ |
| ன் | + | அ | - | .......... | ற் | + | அ | - | .......... |
| ன | + | ஆ | - | .......... | ட் | + | அ | - | .......... |
| ல் | + | அ | - | .......... | ட் | + | ஆ | - | .......... |
| ல் | + | ஆ | - | .......... | ட் | + | இ | - | .......... |
| ல் | + | இ | - | .......... | ங் | + | ஆ | - | .......... |
| ம் | + | அ | - | .......... | ப் | + | அ | - | .......... |
| ம் | + | ஆ | - | .......... | ள் | + | அ | - | .......... |
| ம் | + | இ | - | .......... | ள் | + | ஆ | - | .......... |
| ம் | + | ஈ | - | .......... | ள் | + | இ | - | .......... |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. **ஆய்த எழுத்து இடம் பெற்றுள்ள சொற்கள் இரண்டு எழுதுக.**

.................................................................................................

24. **கிரந்த எழுத்துக்களைத் தந்து பின்வரும் சொற்களில் உள்ள கிரந்த எழுத்துக்களை இனங்காண்க.**

கிரந்த எழுத்துக்கள் : ....................................................................

நஷ்டம் - .......... வருஷம் - .......... ஜனாதிபதி - ..........

25. **பொருள் வேறுபட்ட சொல்லைத் தெரிவு செய்க.**

அ. அந்தி, சாயங்காலம், மாலை, அடுக்கல், வைகறை, சாய்பொழுது

ஆ. அறம், தருமம், கொடை, வண்மை, மறம், ஈகை

இ. ஒலி, சத்தம், அரவம், பாம்பு, ஓசை, கம்பலை

ஈ. கடல், வேலை, சக்கரம், சமுத்திரம், ஆழி, அளக்கர்

26. **தடித்த எழுத்துச் சொல்லுக்கான பொருத்தமான ஒத்த சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்க.**

அ. வீட்டின் முற்றத்தில் அழகிய **விருட்சம்** நின்றது.
(வேம்பு, மரம், ஆரணியம்)

ஆ. இராமன் **கன்னல்** சாப்பிட்டான். (கலாபம், கரும்பு, கதம்பம்)

இ. கண்ணன் **அரவம்** தீண்டி இறந்தான். (சத்தம், பாம்பு, அணங்கு)

ஈ. **பனை** கற்பகதரு என அழைக்கப்படும். (தாலம், தாளம், தாழம்)

உ. புலவனுடன் இணைந்தது **வறுமை.** (இன்னல், நரிவு, நல்குரவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. கூண்டிற் கிளி

01. பின்வரும் சொற்கூட்டங்களில் ஒருசொல் வேறுபட்டது. அச் சொல்லின் கீழ்க் கீறிடுங்கள்.

அ. விருப்பம், அவா, கேடு, வாஞ்சை

ஆ. வைகறை, விடியல், அஸ்தமனம், புலரி

இ. பங்கயம், புஸ்பம், கமலம், தாமரை

ஈ. சூரியன், பகலவன், வெய்யோன், மதி

உ. ஆவல், துன்பம், அல்லல், வேதனை

02. பின்வரும் சொற்களுக்கு எதிர்பொருட் சொற்களை எழுதுங்கள்.

அ. உயர்வு ........................ ஈ. பெரியவர் ........................

ஆ. அமைதி ........................ உ. இளமை ........................

இ. பெருமை ........................ ஊ. வெப்பம் ........................

03. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கான ஒத்த பொருட் சொற் களை எழுதுங்கள்.

அ. சுலபம் ........................ ஈ. கடல் ........................

ஆ. குளிர்ச்சி ........................ உ. வாஞ்சை ........................

இ. வனப்பு ........................ ஊ. ஓசை ........................

04. கட்டத்தில் உள்ள பொருத்தமான சொல்லை வைத்து இடை வெளிகளை நிரப்புங்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| புதிரை | ஆவலை | எல்லை | பூமி | மலர்ச்சி | அறிகுறிகள் | பொறுமை |

அ. பொறுமைக்கும் ஓர் .................................... உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. ஆசிரியரின் புத்திமதி, என்னைப் படிக்க வேண்டும் என்ற ............... தூண்டியது.

இ. பாட்டியின் ................................ கேட்ட பேரன் சிரித்தான்.

ஈ. பொறுத்தார் ......................... ஆள்வார்.

உ. ...................... என்ற பண்பை அனைவரும் பின்பற்ற வேண்டும்.

ஊ. வீட்டிற்கு வரும் விருந்தினரை முக ............................ கொண்டு வரவேற்க வேண்டும்.

எ. மழை வருவதற்கான ...................... வானமெங்கும் காணப்பட்டன.

**05. கீழே தரப்பட்டுள்ள பலசொற்கள் குறிக்கும் ஒரு பொருளின் பெயரை எழுதுங்கள்.**

| | ஒருபொருள் | பன்மொழி |
|---|---|---|
| அ. | ........................... | கங்குல், இராத்திரி, நிசி |
| ஆ. | ........................... | அழல், தழல், அக்கினி, தீ |
| இ. | ........................... | அமர், யுத்தம், கலி, சமர் |
| ஈ. | ........................... | உண்டி, போசனம், ஆகாரம் |
| உ. | ........................... | மாசு, களங்கம், வடு |

**06. கீழ்வருவனவற்றை முற்றுப்பெற்ற தொடர், முற்றுப் பெறாத தொடர் என வேறுபடுத்துங்கள்.**

அ. நீ தோட்டத்துக்குப் போ (....................)

ஆ. அவன் வந்தால் இதை (....................)

இ. குருவி கூடு கட்டி வாழ்ந்தது. (....................)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. மனமிருந்தால் இடம் (....................)

உ. முயற்சி செய் பலனை எதிர்பாராதே (....................)

ஊ. வெள்ளம் வேகமாக (....................)

எ. திருக்குறள் உலகம் போற்றும் நூலாகும் (....................)

**07. கீழே தரப்பட்டுள்ள பழமொழிகள் உணர்த்தும் பொருத்தமான கருத்தின் கீழ்க் கீறிடுங்கள்.**

அ. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
1. விருந்தோம்பல் 2. செய்ந்நன்றி
3. ஒற்றுமை 4. இளம்பருவம்

ஆ. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்
1. நியாயம் கேட்டல் 2. முயற்சி
3. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தல் 4. அச்சமின்மை

இ. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
1. ஒற்றுமையே பலம் 2. வெற்றிக்கு வழி
3. குருவை மதித்தல் 4. சினமடையாதே

ஈ. இளமையில் கல்வி சிலையில் எழுத்து
1. கல்வியின் முக்கியத்துவம் 2. சிலையின் மேன்மை
3. இளம்பருவம் 4. இளமைக்கல்வி அழியாதது

உ. கடன் இல்லாத கஞ்சி கால்வயிறு போதும்
1. கலகம் 2. முயற்சி
3. நிம்மதி 4. நம்பிக்கை

**08. பின்வரும் பழமொழிகளை வைத்து வாக்கியம் அமையுங்கள்.**

**(உ-ம்) :- சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்.**
சிறுதுரும்பும் பல் குத்த உதவும் என்பது போல வேண்டாதவர்கள் என நாம் ஒதுக்குபவர்களும் எமக்கு ஒருபோது உதவுவார்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. பானையில் உண்டானால் அகப்பையில் வரும்.

.......................................................................................................

.......................................................................................................

ஆ. இரக்கப் போனாலும் சிறக்கப் போ.

.......................................................................................................

.......................................................................................................

இ. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

.......................................................................................................

.......................................................................................................

ஈ. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா?

.......................................................................................................

.......................................................................................................

**09. கீழ்வரும் வினாக்களுக்குரிய விடைகளைக் கீறிடப்பட்டுள்ள இடங்களில் நிரப்புக.**

அ. பேசுவோனைச் சுட்டும் பெயர் ................................ ஆகும்.

ஆ. .......................... சுட்டும் பெயர் முன்னிலைப் பெயர் ஆகும்.

இ. பேசப்படுவதைச் சுட்டும் பெயர் ............................ எனப்படும்.

ஈ. தன்மைப் பெயர், முன்னிலைப் பெயர், படர்க்கைப் பெயர் என்பன ........................ பெயர்கள் ஆகும்.

உ. தன்மைப் பெயர்களுக்கு உதாரணங்கள் தருக.
(உ-ம்):- நான் **கேட்டேன்.**

அ. ............................... போனோம்.

ஆ. ............................... சென்றோம்.

இ. ............................... பேசினோம்.

ஈ. ............................... பேசினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. **கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு கீறிடப்பட்ட இடங்களில் விடை எழுதுங்கள்.**

அ. முன்னிலைப் பெயர்கள் இரண்டு தருக.

..............................................................................................

ஆ. கேட்போனைச் சுட்டும் பெயர்களை எவ்விதம் அழைப்பார்கள்?

..............................................................................................

இ. பழந்தமிழில் முன்னிலைப் பெயர்களாகப் பயன்படுத்தப்பட்ட சொற்கள் மூன்று தருக.

..............................................................................................

..............................................................................................

ஈ. நீ என்பது முன்னிலை ........................................ பெயராகும்.

நீங்கள் என்பது முன்னிலைப் .............................. பெயராகும்.

உ. நீங்கள் என்பது மரியாதை .......................... ஆகவும் பயன்படுத்தப்படுகிறது.

ஊ. முன்னிலைப் பெயர்களுக்கு உதாரணம் தருக.

அ. ................................ எப்பொழுதும் வருகிறாய்.

ஆ. ................................ அனைவரும் இங்கே வாருங்கள்.

இ. .................... எப்பொழுதும் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும்.

11. **பின்வரும் வினாக்களுக்குக் கீறிடப்பட்ட இடங்களில் விடை எழுதுங்கள்.**

அ. படர்க்கைப் பெயர்கள் எச்சுட்டெழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பிறக்கின்றன?

..............................................................................................

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. பேசப்படுவோனைச் சுட்டும் பெயர்களை எவ்விதம் அழைப்பர்?
..........................................................................................................

இ. முன்னிலைப் பெயருக்கு இரு வாக்கியம் தருக.
..........................................................................................................
..........................................................................................................

**ஈ. படர்க்கைப் பெயர்களுக்கு உதாரணம் தருக.**

அ. ................................ வந்தான்.

ஆ. ................................ ஓடினாள்.

இ. ................................ பாடினார்.

ஈ. ................................ உண்டது.

உ. ................................ உண்டன.

ஊ. உவை ................................

எ. உவர் ................................

**உ. பின்வரும் சொற் கூட்டங்களை உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்துங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| அவன் | ................................ | அது | ................................ |
| இவன் | ................................ | அவை | ................................ |
| அவர் | ................................ | அஃது | ................................ |

**ஊ. பின்வரும் சொற்களைக் கொண்டு வாக்கியங்களைப் பூர்த்தி செய்யுங்கள்.**

அ. அவன் மாடுகளைக் குளத்துக்குக் கொண்டு ..........................

ஆ. ...................... தையல் கலையில் சிறந்து விளங்கினாள்.

இ. அவன் ஆண்பால் என்பதுபோல அவள் ...................... ஆகும்.

ஈ. இவன், இவள் என்பன .................................... பெயர்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**12. தடித்த சொல்லுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக் குள் இருந்து தெரிவு செய்து கீறிடுங்கள்.**

அ. ஒழுக்கம் **விழுப்பம்** தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.
**(போற்றப்படும், பாதுகாக்கப்படும், மேன்மை, உயர்வு)**

ஆ. ஆலயம் தொழுவது **சாலவும்** நன்று.
**(தனியாக, சேர்ந்து, பிரிந்து, மிகவும்)**

இ. **ஐயம்** இட்டு உண். இங்கே ஐயம் என்பது
**(செறிவு, ஐது, சத்து, பிச்சை)**

ஈ. 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி' இங்கே **அந்தம்** என்பதன் கருத்து
**(தொடக்கம், முடிவு, இறைவன், இயைபு)**

உ. ஆறுவது **சினம்** என்றார் ஔவைப்பாட்டி. இங்கே சினம் என்பது
**(கோபம், கயமை, இறக்கம், விவேகம்)**

**13. பாடப் புத்தகத்தை அடிப்படையாக வைத்து வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

அ. கிளி, பவளத்தை எவ்விதம் போற்றி என்ன வேண்டுதலை விடுத்தது?

..........................................................................................

..........................................................................................

ஆ. அடிமை வாழ்வு ஒழிக என்று சொன்னவர் யாரெனப் பாடலில் கூறப்பட்டுள்ளது?

..........................................................................................

..........................................................................................

இ. கூட்டில் அடைத்து வைத்த கிளிக்குப், பவளம் என்ன செய்வதாகக் கூறுகிறாள்? (மூன்று தருக)

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. கிளி, நல்ல மொழிகள் கூறியதால் பவளத்துக்கு எந்நிலை ஏற்பட்டது?

.......................................................................................................

.......................................................................................................

உ. பவளம், கிளிக்கூட்டைத் திறந்த போது நடந்த நிகழ்வுகள் என்ன?

.......................................................................................................

.......................................................................................................

ஊ. கிளி விரும்பிய வாழ்வு எவ்வாறானது?

.......................................................................................................

.......................................................................................................

**14. கீழ்வரும் பாடலைப் படித்தபின்பு தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

## கிளி

**தேமலர்ச் சோலையிலே - வாசமெழு**
**தென்றல் உலாவையிலே**
**மா மண மங்கையைப் போல் - பெரிது**
**மகிழ்ந்து நீ தங்கினையோ?**

**பூனைகள் இங்கு வரா - வேடர்தம்**
**பொறியின் பயமுமில்லை;**
**யானுனைக் காத்திடுவேன் - இறங்கி நீ**
**என்கையில் வந்திடாயோ?**

**வட்டமா யுன்கழுத்தில் - ஒருநாளும்**
**வாடாத ஆரமதை**
**இட்டவர் ஆரடியோ? - எனக்கும்**
**இயம்புவையோ? கிளியே!**

**மாணிக்க மூக்கழகும் - மரகத**
**வர்ண வடிவழகும்**
**காணக் கண் ணாயிரந்தான் - இருப்பினும்**
**கண்டு முடிந்திடுமோ?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கத்தரிபோல வெட்டிக் - கனியினை**
**கௌவி யெடுத்தோடச்**
**சித்திர வாயளித்த கடவுள்**
**திருவருள் சற்றோ அம்மா!**

கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை

அ. கிளி தங்கியுள்ள இடம் எவ்விதமானது?

..........................................................................................

ஆ. கிளிக்கு, எதிரிகள் இங்கு இல்லை என எவ்விதம் கவிஞர் பாடுகின்றார்?

..........................................................................................

இ. கிளியின் ஆரம் எவ்விதமானது எனக் கவிஞர் ஆச்சரியப்படுகிறார்?

..........................................................................................

ஈ. கிளியின் மூக்கு, அழகு எவ்விதம் கவிஞரால் சிறப்பிக்கப்பட்டுள்ளது?

..........................................................................................

உ. கிளியின் சித்திரவாய் பற்றி எவ்விதம் சித்திரிக்கப்பட்டுள்ளது?

..........................................................................................

**15. பெயர்ச் சொற்கள் ஆறுவகைகள். சொற்களைக் கொண்டு அட்டவணையை நிரப்புங்கள்.**

| | பொருட் பெயர் | இடப் பெயர் | காலப் பெயர் | சினைப் பெயர் | குணப் பெயர் | தொழிற் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| அ | மேசை | .................. | .................. | .................. | .................. | .................. |
| ஆ | ............. | மைதானம் | .................. | .................. | .................. | .................. |
| இ | ............. | .................. | .................. | வேர் | .................. | .................. |
| ஈ | ............. | .................. | மத்தியானம் | .................. | .................. | .................. |
| உ | ............. | .................. | .................. | .................. | நீளம் | பொரித்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கீழே தரப்பட்டுள்ள லகர, ளகர, ழகர பேதச் சொற்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.

(உ-ம்) அலை : காட்டில் வழி தெரியாது வேடன் அலைந்தான்.

அழை : நண்பன் என்னை அழைத்து யோசனை கேட்டான்.

அளை : சிறுவர்கள் சோற்றை அளைந்து பின் சிந்துவார்கள்.

அ. அலகு : ..........

அழகு : ..........

அளகு : ..........

ஆ. இலை : ..........

இழை : ..........

இளை : ..........

இ. ஒலி : ..........

ஒளி : ..........

ஒழி : ..........

17. கீழே தரப்பட்டுள்ள லகர, ளகர, ழகர பேதச் சொற்களுக்குப் பொருள் தருக.

(உ-ம்) அலை : கடலலை, வருந்து, திரி

அழை : கூப்பிடு, வரவழை

அளை : புற்று, தயிர்

அ. உழி : ..........

உளி : ..........

உலை : ..........

உழை : ..........

ஆ. கிலி : ..........

கிளி : ..........

கிழி : ..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. ஒரு பாட்டுடையான்

**01. கட்டத்தில் உள்ள பொருத்தமான சொல்லை வைத்து இடை வெளிகளை நிரப்புங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| வசந்தம் | ஏழைஎளியவர் | சிற்றறிவு | குறுகுறு | உண்டி |

அ. ...................... நடந்து மழலைச் சொல் பேசும் குழந்தையை விரும்பாதவர்கள் யாரும் உலகில் உளரோ?

ஆ. ஏழைகளுக்கு ...................... கொடுத்து உதவுவோர் உயிர் கொடுத்தோரே என மணிமேகலைக் காப்பியம் எடுத்தியம்புகிறது.

இ. உலக மக்கள் அனைவரதும் வாழ்விலும் ...................... வீச வேண்டும் என்பதே எமது விருப்பம்.

ஈ. ...................... படைத்த உயிரினங்கள் கூட ஒன்றித்து வாழவே விரும்புகின்றன.

உ. ...................... இல்லாத சமூகத்தைத் தோற்றுவிப்பதே பாரதியின் இலட்சியம்.

**02. பின்வருவனவற்றைத் தொடர்புபடுத்துங்கள்.**

| | | |
|---|---|---|
| அ. | பரம்பரை பரம்பரையாக | பண்டிகை |
| ஆ. | இயம்புதல் | குறைத்து மதிப்பிடல் |
| இ. | பெருநாள் | வாழையடிவாழையாக |
| ஈ. | திருமண வீட்டு | கூறுதல் |
| உ. | இளக்காரம் | கலியாண வீடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03. கீழே தரப்பட்டுள்ள அடைப்புக்குள் உள்ள பொருத்தமான சொற்களைக் கொண்டு வாக்கியங்களில் உள்ள இடைவெளி களை நிரப்புங்கள்.**

அ. கொடுக்கக் கொடுக்கச் ............................................ பெருகும். **(வறுமை, செல்வம்)**

ஆ. .................................... கேட்பவன் ஒருபோதும் உய்யமாட்டான். **(நற்புத்தி, துர்ப்புத்தி)**

இ. ................. முகமுள்ள குரங்கு ஒன்றாயினும் காணமுடியவில்லை. **(நல்ல, கெட்ட)**

ஈ. பிறரை எப்பொழுதும் ............................ வாழப் பழக வேண்டும். **(போற்றி, தூற்றி)**

உ. மனத்தினது தூய்மை மக்களுக்கு .................................. தரும். **(ஆக்கம், கேடு)**

**04. பின்வருவனவற்றைத் தொடர்புபடுத்துங்கள்.**

| | |
|---|---|
| அ. கைதாங்குதல் | நட்டமாதல் |
| ஆ. துண்டுவிழுதல் | ஒப்பேறுதல் |
| இ. சந்திக்கு இழுத்தல் | உதவி செய்தல் |
| ஈ. கரையேறுதல் | தன்வசப்படுத்தல் |
| உ. தூண்டில் போடுதல் | அவமானமுண்டாக்கல் |

**05. பின்வரும் இரட்டைக் கிளவிகளை (சொற்களை) வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமையுங்கள்.**

அ. கடகட : ..............................................................................
..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. கமகம : ........................................................................................................

........................................................................................................

இ. கணகண : ........................................................................................................

........................................................................................................

ஈ. வளவள : ........................................................................................................

........................................................................................................

உ. திடுதிடு : ........................................................................................................

........................................................................................................

**06. கீழே கட்டத்தில் தரப்பட்டுள்ள இரட்டைக் கிளவிகளைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| தகதக | கலகல | குசுகுசு | சலசல | மடமட |

அ. தங்க ஆபரணம் விற்பனை செய்யும் நிலையத்தில் ஆபரணங்கள் ........................ என ஒளிர்த்தன.

ஆ. மலையில் இருந்து சிற்றருவி ........................................ எனக் கீழ்நோக்கிப் பாய்ந்தது.

இ. ........................ எனப் பேசாது எப்பொழுதும் மௌனம் சாதிப்பவர்களின் முகம் விடிவதில்லை.

ஈ. நீண்டதூர ஓட்டப் பந்தயத்தில் பங்குபற்றிய வீராங்கனை தண்ணீரை ........................................ எனக் குடித்தாள்.

உ. பாரதியார் .............................. எனப் பழங்கதைகள் பேசும் பெண்களைத் தனது கவியினால் சாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

அ. வினைச் சொற்களின் இரு வினைகளும் எவை?

..............................................................................................................

ஆ. முற்றுவினை என்றால் என்ன? உதாரணம் இரண்டு தருக.

..............................................................................................................

**15. கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பாடப் புத்தகத்தை அடிப் படையாகக் கொண்டு விடை எழுதுங்கள்.**

அ. 'வான் சிறப்பு' என்ற திருக்குறள் அதிகாரத்தில் வலியுறுத்தப்படும் கருத்து என்ன?

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. பாலிசி (Palissy) என்ற அறிஞர் ஊற்றுக்கு அடிப்படை எது என்றார்?

.................................................................................................

இ. 'நீரின்றி அமையாது உலகெனின் யார் யார்க்கும்.
வானின்றி அமையாது ஒழுக்கு' என்ற குறளின் கருத்தை எழுதுக.

.................................................................................................

## பாடசாலை மட்டக்கணிப்பீடு
## அலகுப் பரீட்சை - 04

**01. பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிந்தெடுத்துக் கட்டுரை எழுதுங்கள்.**

அ. வயோதிபர் ஒருவரின் சுயசரிதை.

ஆ. ஆறுவது சினம்.

இ. எமது நாட்டின் சமாதானத்தின் தேவை.

ஈ. நான் விரும்பும் தொழில்.

உ. ஊக்கமுடைமை.

ஊ. நீரின் முக்கியத்துவம்

**(புள்ளிகள் 25)**

**02.** நீங்கள் புதிதாகக் கட்டியிருக்கும் வீட்டில் குடியிருக்கிறீர்கள் எனவும் அவ்வீட்டுக்கு உமது நண்பன் அல்லது நண்பியை வருமாறு கேட்டுக் கடிதம் ஒன்று எழுதுங்கள்.

**(புள்ளிகள் 15)**

**03.** 'புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்' என்ற தலைப்பில் விளம்பரம் ஒன்று எழுதுக.

**(புள்ளிகள் 15)**

**04.** ''தண்ணீரைச் சிக்கனமாகப் பாவிப்போம்'' என்பது பற்றித் துண்டுப் பிரசுரம் ஒன்று எழுதுங்கள்.

**(புள்ளிகள் 15)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. குமணன் நாடகம்

## கட்டுரை, கடிதம்

01. பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றிக் கட்டுரை எழுதுங்கள்.
அ. எனது செல்லப் பிராணி
ஆ. முயற்சி செய்தால் பயன் பெறலாம்.
இ. தாயின் பெருமை
ஈ. கிழப்பசுவின் சுயசரிதை (புள்ளிகள் 30)
(பயிற்சிக் கொப்பி பயன்படுத்துக)

02. உமது பகுதியில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுகிறது என வைத்துக் கொண்டு மின்சாரசபை ஆணையாளருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.
(பயிற்சிக் கொப்பி பயன்படுத்துக) (புள்ளிகள் 20)

**03. பின்வருவனவற்றிற் ஒத்த கருத்துச் சொற்களை எழுதுங்கள்.**

அ. வையகம் ........................ இ. போற்றுதல் ........................

ஆ. காப்பவர் ........................ ஈ. மேலோர் ........................

**04. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள ஆகுபெயர்கள் எவ்வகையின என அடைப்பினுள் உள்ள சொற்களின் கீழ்க் கீறிடுங்கள்.**

அ. **செவ்வந்தி** அணிந்திருந்த மங்கையின் அழகோ அழகு.
(குணவாகு பெயர், பொருளாகு பெயர்)

ஆ. சுனாமிப் பேர்அதிர்வின் பின் **ஊரே** அடங்கிவிட்டது.
(சினையாகு பெயர், இடவாகு பெயர்)

இ. **கீரை** இங்கே வா?
(குணவாகு பெயர், தொழிலாகு பெயர்)

ஈ. இந்த முறையும் வெள்ளையே சவாரியில் **முதலிடம்** வரும்.
(குணவாகு பெயர், முதலாகு பெயர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. **கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்த பின்பு கீழே தரப் பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

வீரக்கற்பு வாய்ந்த கண்ணகியின் கதையால் ஓர் அரசியல் உண்மை விளங்குகிறது, **'நெறி தவறிய அரசனை அறமே ஒறுக்கும்'** என்ற உண்மையைப் பாண்டியன் வரலாறு காட்டுகிறது. அரண்மனைச் சிலம்பைக் களவாடிய கள்வன் அகப்பட்டான் என்று பொற்கொல்லன் சொல்லிய சொல்லை ஆராய்ந்து பாராது உண்மையை விசாரித்து அறியாது அக்கள்வனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வருக என்று பணித்தான் பாண்டியன். தன் கணவன் இறந்தான் என்றறிந்த கண்ணகி சீறி எழுந்தாள். ''தீவேந்தன் தனைக் கண்டு இத்திறன் கேட்பேன் யான்'' எனப் புறப்பட்டாள். கருங்கூந்தல் விரிந்து கிடக்க, கண்களில் கண்ணீர் ஆறாகப் பெருகக் கையில் ஒற்றைச் சிலம்பேந்திக் காவலன் முன்னே சீறி எழுந்து நின்றாள் கண்ணகி.

அ. கண்ணகியின் கதை விளக்கும் அரசியல் உண்மை யாது?

.......................................................................................................

.......................................................................................................

ஆ. கண்ணகியின் சீற்றத்துக்கான காரணம் என்ன?

.......................................................................................................

.......................................................................................................

இ. பாண்டியன் செய்த தவறு என்ன?

.......................................................................................................

.......................................................................................................

ஈ. பாண்டியன் முன் சென்ற கண்ணகியின் கோலம் எவ்வாறிருந்தது?

.......................................................................................................

.......................................................................................................

உ. கண்ணகி எவ்விதம் அரற்றியபடி பாண்டியனைக் காணப் புறப்பட்டாள்?

.......................................................................................................

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. பின்வரும் அடுக்குமொழிகளை வைத்து வாக்கியம் அமையுங்கள்.

அ. கட்டிக்கட்டி : ......................................................................
......................................................................................

ஆ. தேடித்தேடி : ......................................................................
......................................................................................

இ. உழைத்துஉழைத்து : ..............................................................
......................................................................................

ஈ. குனிந்துகுனிந்து : ................................................................
......................................................................................

உ. பட்டிதொட்டி : ....................................................................
......................................................................................

07. கீழே தரப்பட்டுள்ள நீதிநூல் பாடலைப் படித்த பின்பு தரப் பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

**நல்லா ரொருவருக்குச் செய்த உபகாரம்**
**கன்மே லெழுத்துப் போற் காணுமே**
**ஈரமிலா நெஞ்சத்தார்க்கு கீந்த உபகாரம்**
**நீர்மே லெழுத்துக்கு நேர்** - ஔவையார் -

அ. நல்லவர் ஒருவருக்குச் செய்யும் உதவி எவ்வாறானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது?

......................................................................................
......................................................................................

ஆ. இரக்கமில்லாத மனத்தையுடையவர்க்குச் செய்யும் உதவி எது போன்றது என ஔவைப்பாட்டி கூறுகின்றார்?

......................................................................................
......................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. **பின்வரும் வாக்கியங்களை அமைப்பு அடிப்படையில் எவ் வகையைச் சேர்ந்தன என எழுதுங்கள்.**

| தனிவாக்கியம் | கூட்டுவாக்கியம் | கலப்புவாக்கியம் |
|---|---|---|

அ. அவன் நண்பனோடு உரையாடினான். (................................)

ஆ. மயில் தோகை விரித்து ஆடியது. (................................)

இ. சிலப்பதிகாரம் கற்பனைக் கதை என்பது சிலரது அபிப்பிராயம். (................................)

ஈ. இன்று பெரியபுராணம் பற்றிய பாடத்தைப் படிப்போம் என்று ஆசிரியர் கூறினார். (................................)

உ. பாம்பு படமெடுத்து ஆடியது. (................................)

09. **பின்வரும் வாக்கியங்களை அமைப்பு அடிப்படையில் எவ் வகையைச் சேர்ந்தன என எழுதுங்கள்.**

| கூற்று | ஏவல் | வினா | உணர்ச்சி | வியங்கோள் |
|---|---|---|---|---|

அ. சந்திரன் பூமியைச் சுற்றி வருகிறது (................................)

ஆ. அவன் எங்கு சென்றான் (................................)

இ. ஏழைகளுக்குக் கருணை காட்டுவாயாக (................................)

ஈ. ஐயையோ! இது என்ன விபரீதம் (................................)

உ. பூங்கன்றுகளை ஒழுங்காக நடு (................................)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. பின்வருவனவற்றைப் பொருத்தமுறத் தொடர்புபடுத்துங்கள்.**

| | | |
|---|---|---|
| அ. | தொழிலாளர்களை மேற்பார்வை செய்பவர் | லயம் |
| ஆ. | புதியதேர் முதன்முதலில் ஓடுவது | கஷ்டவாதி |
| இ. | மொழவு (முழவு) | இசைக்கருவி |
| ஈ. | மலையகத் தொழிலாளரின் குடியிருப்பு | கங்காணி |
| உ. | வறுமையானவன் | வெள்ளோட்டம் |

**11. தரப்பட்டுள்ள தனிவாக்கியங்களைக் கூட்டுவாக்கியங்களாக மாற்றி எழுதுங்கள்.**

அ. மாதவன் கோயிலுக்கு வந்தான்
பாண்டியன் கோயிலுக்கு வந்தான்.
அங்கு கடவுளை வணங்கினர்
வீட்டுக்குச் சென்றனர்.

..........................................................................................

..........................................................................................

ஆ. பரிமளா பூப் பறித்தார்
நிசாயா பூப் பறித்தார்
அவர்கள் மாலை கட்டினர்
கழுத்தில் போட்டனர்

..........................................................................................

..........................................................................................

**12. பின்வரும் கூட்டு வாக்கியங்களைத் தனிவாக்கியங்களாக எழுதுங்கள்.**

அ. புற்றிலிருந்த பாம்பு வெளியே வந்து கோழிக்குஞ்சைப் பிடித்துக் கொண்டோடிச் சென்று மரத்தின் மேலேறி உயரத்துக்குச் சென்றது.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. யானை மரத்தை முறித்தது மட்டுமன்றி அருகில் இருந்த பானையை உடைத்துக் குடிசையைப் பிடிங்கி அதன் பின் பயிரையும் நாசம் செய்தது.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

**13. கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பாடப் புத்தகத்தை அடிப் படையாகக் கொண்டு விடை எழுதுங்கள்.**

அ. குமண மன்னனின் சிறந்த குணங்கள் எவை?

.......................................................................................................

ஆ. குமண மன்னன், இளங்குமணனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கக் காரணம் என்ன?

.......................................................................................................

இ. ஈகையின் சிறப்புப் பற்றிக் குமணனின் கருத்துக்களில் இரண்டு தருக.

.......................................................................................................

.......................................................................................................

ஈ. 'வீடு கொளுத்துகின்ற இராசாவுக்கு நெருப்புக் கொள்ளி எடுத்துக் கொடுக்கும் மந்திரிகள்' என்ற தொடரால் உணர்த்தப்படும் செய்தி யாது?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

**14. பின்வரும் இணைமொழிகளை வைத்து வாக்கியம் அமைக்குக.**

அ. கண்ணும் கருத்தும் : ..........................................................

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. தட்டுத்தடுமாறி : ..................................................................

இ. கண்டதுண்டம் : ..................................................................

ஈ. அல்லும்பகலும் : ..................................................................

உ. கையும்களவும் : ..................................................................

**15. நீங்கள் சென்று வந்த பாடசாலைக் கல்விச் சுற்றுலா தொடர் பாக அறிக்கையொன்று தயாரிக்க.**

..................................................................

(பயிற்சிக் கொப்பியில் எழுதுக)

**16. உமக்குத் தெரிந்த பழமொழிகள் ஐந்து எழுதுக.**

..................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. தேனீயும் குளவியும்

**01. பொருத்தமான உவமைத் தொடர்களை வைத்துக் கீறிட்ட இடங்களை நிரப்புங்கள்.**

| | | |
|---|---|---|
| வெந்த புண்ணில் வேல் பாய்வது போல | | கண்ணை இமைகாப்பது போல |
| காட்டுத் தீ போல | கிணற்றுத் தவளை போல | கீரியும் பாம்பும் போல |

அ. நாம் ....................................... வாழாது உலக நடப்புக்களை அறிந்திருத்தல் வேண்டும்.

ஆ. மகாத்மா காந்தி இறந்த செய்தி ....................................... உலகெங்கும் பரவியது.

இ. நாம் ................................. எப்பொழுதும் பகைமை பேணாது ஒற்றுமையாக இருக்கப் பழகுதல் வேண்டும்.

ஈ. அபிமன்யுவின் இறப்பினால் துடித்திருந்த இராவணனுக்கு; கும்ப கர்ணனின் இழப்புச் செய்தி ....................................... இருந்தது.

உ. ......................... பெற்றோர் எம்மைப் பாதுகாத்து வருகின்றனர்.

**02. பின்வரும் இரட்டைக் கிளவிகளை வைத்து வாக்கியம் அமையுங்கள்.**

அ. வழவழ : .......................................................................................
.......................................................................................

ஆ. பளபள : .......................................................................................
.......................................................................................

இ. முணுமுணு : .......................................................................................
.......................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. கசகச : ..........................................................................

..........................................................................................

உ. குறுகுறு : ......................................................................

..........................................................................................

**03. தடித்த எழுத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கீறிடுங்கள்.**

அ. குகன் தனது ஆயுதங்களைக் **களைந்தான்** இங்கு களைந்தான் என்ற சொல் குறிப்பது
**(சேர்த்தான், எடுத்தான், தொடுத்தான், அகற்றினான்)**

ஆ. துரியோதனனின் கண்கள் ஆச்சியத்தால் விரிந்தன. **ஆச்சரியத்தால்** என்பது
**(கோபத்தால், எழுச்சியால், வியப்பால், மகிழ்ச்சியால்)**

இ. வென்னீர் என்பதன் திருந்திய வடிவம்
**(வெந்நீர், வெண்ணீர், வெநனீர், வென்றீர்)**

ஈ. நாம் எப்பொழுதும் இன்சொல் பேசுதலையே தலைக்கொள்ளல் வேண்டும். **இன்சொல்** என்பதன் எதிர்ப்பொருட் சொல்
**(தன்சொல், இனியசொல், வன்சொல், மென்சொல்)**

உ. இராமனின் கீர்த்தி உலகெல்லாம் பரவியது **கீர்த்தி** என்பது
**(சேய்மை, புகழ், மகிழ்ச்சி, வீரம்)**

**04. பின்வரும் உவமைத் தொடர்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.**

அ. அச்சில்லா வண்டிபோல : ..........................................................

..........................................................................................

ஆ. கடன்பட்டார் நெஞ்சம்போல : ....................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. பூவும் மணமும் போல : ..........................................................................
..........................................................................................................

ஈ. தாரகை நடுவண் தண்மதிபோல : ...............................................................
..........................................................................................................

உ. கொழுகொம்பற்ற கொடி போல : ...............................................................
..........................................................................................................

**05. பின்வரும் சொற்களுக்குரிய எதிர்பொருள்களை எழுதுங்கள்.**

அ. இரகசியம் .......................... ஊ. கனவு ..........................

ஆ. உற்சாகம் .......................... எ. கங்குல் ..........................

இ. ஈரம் .......................... ஏ. உதயம் ..........................

ஈ. ஆக்கம் .......................... ஐ. புராதனம் ..........................

உ. இன்சொல் .......................... ஒ. காய்தல் ..........................

**06. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( X ) எனவும் அடையாளமிடுங்கள்.**

அ. க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறு எழுத்துக்களும் வல்லின எழுத்துக்களாகும். (.........)

ஆ. உயிர்மெய் எழுத்துக்கள்; உயிர் எழுத்துக்களும், மெய் எழுத்துக்களும் சேர்வதனால் உண்டாகின்றன. (.........)

இ. உயிர்மெய் எழுத்து உச்சரிக்கும் கால அளவு இரண்டு மாத்திரை என்பர். (.........)

ஈ. ஆய்த எழுத்தைத் 'தனிநிலை' எழுத்து என்பர். (.........)

உ. ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறு எழுத்துக்களும் இடையின எழுத்துக்களாகும். (.........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. பின்வரும் வாக்கியங்களில் வேற்றுமை ஏற்றுள்ள சொற்களை அடைப்புக்குள் எழுதுங்கள்.**

அ. மன்னனால் அரங்கு கட்டப்பட்டது. (..................................)

ஆ. இலங்கையின் வடக்கில் யாழ்ப்பாணம் உண்டு. (..................................)

இ. கணவன், மனைவியை அன்பொழுக அழைத்தான். (..................................)

ஈ. நீந்திப்பழக நீரில் இறங்க வேண்டும். (..................................)

உ. நீதிபதியினது தீர்ப்பை மனமுவந்து வரவேற்றனர். (..................................)

**08. பின்வரும் இணைமொழிகளை வைத்து வாக்கியம் அமையுங்கள்.**

அ. ஆறஅமர : ..................................................................................

..................................................................................................

ஆ. பேரும்புகழும் : ..........................................................................

..................................................................................................

இ. விருப்புவெறுப்பு : ......................................................................

..................................................................................................

ஈ. மூலைமுடுக்கு : ..........................................................................

..................................................................................................

உ. வாடிவதங்கி : ..............................................................................

..................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**09. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுங்கள்.**

அ. கர்வம் அடக்குதல் என்பதன் பொரும் தரும் மரபுத்தொடர்
   1. வாய் காட்டுதல்   2. முகத்தல் கரி பூசுதல்
   3. நாக்கு வளைத்தல்   4. வால் நறுக்குதல்

ஆ. போர்க்களத்தில் படையணிகள் எல்லாவற்றிற்கும் முன் வரிசையில் செல்லும் படைப்பிரிவு
   1. பீரங்கிப்படை   2. கரந்தடிப்படை
   3. அதிரடிப்படை   4. தூசிப்படை

இ. 'நித்திய வேதனை' என்ற பொருள் குறித்த உவமைத்தொகை
   1. ஊமைகண்ட கனவுபோல
   2. இனம் பிரிந்த மான் போல
   3. ஊர்க் கடனும், உள்ளங்கைச் சிரங்கும் போல
   4. ஏறவிட்டுப் பின் ஏணி எடுத்தாற் போல

ஈ. குவலயம் என்பதன் ஒத்தசொல்
   1. இல்லம்   2. உலகம்   3. மனை   4. விண்ணுலகம்

உ. உலக முடிவை இவ்வாறு கூறுவர்
   1. கவசம்   2. ஊழி   3. அரியணை   4. அங்கை

ஊ. நடிகர் குழுபோல படைவீரர்
   1. கூட்டம்   2. அணி   3. குழாம்   4. கும்பல்

**10. பின்வரும் உவமைத்தொடர் குறிக்கும் உட்பொருளைக் கட்டத்துள் இருந்து தெரிந்தெடுத்து எழுதுங்கள்.**

| | | |
|---|---|---|
| பயனற்றது | பதட்டநிலை | பட்டும் படாமலும் |
| மகிழ்வுடன் மலர்ச்சி | இன்பத்தின் மேல் இன்பம் | |

அ. ஓடும் புளியம் பழமும்போல ..................................................

ஆ. காட்டில் எறிந்த நிலாப்போல ..................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. சக்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்தது போல ........................

ஈ. கடன்பட்டார் நெஞ்சம் போல ........................................................

உ. சூரியனைக் கண்ட செந்தாமரை போல ......................................

**11. மாறிக்கிடக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் ஆக்குங்கள்.**

அ. அரசனின், இரையாகி, சீற்றத்துக்கு, நாடுகள், அழிந்தன

..........................................................................................................

ஆ. இருந்தன, நிலங்கள், சங்காலத்தில், ஐவகை

..........................................................................................................

இ. தெளிந்த, உள்ளமும், புலவனிடத்தில், பண்பும், காணப்படும்.

..........................................................................................................

ஈ. நாம், மாற்றத்துக்கு, இசைவாக்கம், சுற்றாடல், ஏற்ப, கொள்ள வேண்டும்

..........................................................................................................

உ. மொழியில், செய்யுள், இலக்கியம், தோன்றியது, முதலில், என்பர்

..........................................................................................................

## 12. ஒரு சொல் இருபொருள் அறிவோம்.

### ஒருசொல் இருபொருள்

**காலை** நேரம் விழித்து அன்னை
**காலைத்** தொட்டு வணங்கு!
**வேலை** தொடங்க முன்பு கந்தன்
**வேலைத்** துதித்துத் தொடங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆற்று** மீன்கள் போல் விழித்து
அதிகக் கடமை **ஆற்று!**
தூற்றும் சோம்பற் குணத்தை நீயும்
பூட்டுப் போட்டுப் பூட்டு!

காட்டுச் சிங்கம் போல் முழங்கி
காட்டு வீரம் காட்டு!
நாட்டு மக்கள் போற்றம் வண்ணம்
நாட்டுப் பேரை நாட்டு!

**உண்டு** உடுத்தி ஒதுக்கி வாழும்
உலகில் தீமை **உண்டு!**
**ஒன்று** தெய்வம் என்பவர்தம்
உள்ளத்தோடு **ஒன்று!**

நன்றி : கவிஞர் நந்தலாலா

இப்பாடலில் ஒரே சொல் இருவேறு பொருளைத் தருவதனைக் காண முடிகிறது.

**13. பின்வருவனவற்றுக்கு இருபொருளை எழுதுங்கள்.**

அ. வேலை ......................... .........................

ஆ. ஆற்று ......................... .........................

இ. பூட்டு ......................... .........................

ஈ. உண்டு ......................... .........................

உ. காலை ......................... .........................

ஊ. ஒன்று ......................... .........................

எ. காட்டு ......................... .........................

ஏ. நாட்டு ......................... .........................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14. கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பாடப் புத்தகத்தை அடிப் படையாகக் கொண்டு விடை எழுதுங்கள்.**

அ. தேனீக்கும் குளவிக்கும் பாடலில் தரப்பட்டுள்ள ஒற்றுமை, வேற்றுமை ஒவ்வொன்று தருக.

........................................................................................................

........................................................................................................

ஆ. குளவியின் கொடுமை எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

........................................................................................................

இ. தேனீயை மக்கள் விரும்புவது எதற்காக எனக் கூறப்பட்டுள்ளது?

........................................................................................................

ஈ. புற அழகு, செய்காரியம் என்பன பற்றி இப்பாடலில் எவ்விதம் காட்டப்பட்டுள்ளது?

........................................................................................................

........................................................................................................

**15. கீழே தரும் வினாக்களுக்கு விடை தருக.**

அ. தேனீயால் எமக்குக் கிடைக்கும் நன்மை என்ன?

........................................................................................................

ஆ. குளவியால் எமக்குக் கிடைக்கும் பாதக விளைவு என்ன?

........................................................................................................

........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. அடக்கம் உடைமை

## நிறுத்தற் குறிகளைப் பற்றி அறிவோம்

| | | |
|---|---|---|
| 1. | முற்றுப்புள்ளி | ( . ) |
| 2. | உறுப்பிசைக் குறி காற்புள்ளி | ( , ) |
| 3. | தொடரிசைக் குறி (அரைப்புள்ளி) | ( ; ) |
| 4. | விளக்கிசைக் குறி (முக்காற் புள்ளி) | ( : ) |
| 5. | வினாக்குறி (கேள்விக்குறி) | ( ? ) |
| 6. | வியப்புக்குறி (விளிக்குறி) | ( ! ) |
| 7. | இடைக் கோட்டுக்குறி | ( - ) |
| 8.. | அடைப்புக் குறி | (   ) |
| 9. | மேற்கோட் குறி | ( " ) |

01. **கீழே தரப்பட்டுள்ளவற்றின் மரபுப் பெயர்களை எழுதுங்கள்.**

அ. நெல், புல் என்பவற்றின் இலை ..........................................

ஆ. பனையின் இளங்காய் ..........................................

இ. சோளம், நெல் என்பவற்றின் தொகுதி ..........................................

ஈ. நெல், கம்பு, வரகு, தினை என்பவற்றின் உள்ளீடு ..........................................

உ. நெல், சோளம் என்பவற்றின் வித்து ..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. அடைப்பினுள் தரப்பட்டுள்ள பொருத்தமான விடையின் கீழ் கீறிடுங்கள்.**

அ. இரந்து கேட்டல் என்பது
**(கெஞ்சிக் கேட்டல், பந்தம் பிடித்தல்)**

ஆ. கண்காட்டி விடுதல் என்பது
**(ஏவிவிடுதல், கண்சாடை காட்டுதல்)**

இ. வால் முறுக்குதல் என்பது
**(ஆயத்தம் செய்தல், தூண்டிவிடுதல்)**

ஈ. நெருப்பெடுத்தல் என்பது
**(நெருப்புக் கொடுத்தல், கடுங்கோபம் கொள்ளல்)**

உ. தட்டிக் கொடுத்தல் என்பது
**(உற்சாகப்படுத்துதல், கைதட்டுதல்)**

**03. அடைப்புக்குள் உள்ள பொருத்தமான சொல்லை இடைவெளி களில் வைத்து நிரப்புங்கள்.**

அ. அரசனின் ......................... மீறி நடப்போர் தண்டிக்கப்படுவர். விலங்குகளில் ......................... பெரியது. **(ஆணை, ஆனை)**

ஆ. புசிப்பதற்கு உணவின்றி ................................ ஏழைக்கு, ஏழை ஒருவனே இரங்கி உதவினான்.
குழந்தைகள் ......................... உணவை உண்ணும் பெற்றோர்கள் கொடுத்து வைத்துப் பிறந்தவர்கள் ஆவர்.
**(அளைந்த, அலைந்த)**

இ. சூடு அடிக்கும் இடத்தில் நெல் மணிகள் ........................... கண்ட விவசாயி மகிழ்வெய்தினான். மழை ................... கண்ட மயில்கள் தோகையை விரித்தாடின. **(பொழிதல், பொலிதல்)**

ஈ. மீன் இனத்துள் ...................................... மீனும் ஒன்றாகும். ............................... கூடக் கடல் நீரால் தாக்கமுறுகிறது.
**(பாறை, பாரை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. வெள்ளம் பள்ளத்தை நாடிப் ............................ நிற்கும்.
பறவைகள் ............................ செல்லும் இயல்புடையவை.

(பரந்து, பறந்து)

**04. பொருத்தமான எதிர்ப்பாற் சொற்களைக் கீறிட்ட இடத்தில் வைத்து நிரப்புங்கள்.**

அ. புதல்வனுக்குப் புதல்வி போல, அழகன் ............................

ஆ. செல்விக்கு செல்வன் போல, தனவதி ............................

இ. பாடகனுக்குப் பாடகிபோல, எசமான் ............................

ஈ. சேவகனுக்குச் சேவகி போல, செல்வன் ............................

உ. தோழனுக்குத் தோழிபோல, கடைக்காரன் ............................

**05. பொருத்தமான விடைகளைக் கீறிட்ட இடத்தில் வைத்து நிரப்புங்கள்.**

அ. யானைக் குட்டி போல, அணிலுக்கு ............................

ஆ. முயலுக்குக் குட்டி போல, மானுக்கு ............................

இ. மீனுக்குக் குஞ்சு போல, கழுகுக்கு ............................

ஈ. தென்னைக்குப் பிள்ளை போல, பனைக்கு ............................

உ. புகையிலைக்கு நாற்றுப் போல, நெல்லுக்கு ............................

**06. பின்வரும் தொடர் வாக்கியங்களைத் தனிவாக்கியங்களாக்கி எழுதுங்கள்.**

அ. நாம் உணவு உண்ண வேண்டும்; ஏனெனில் வாழ வேண்டும்.

..........................................................................................

ஆ. அவன் இதனைச் செய்தான்; அதனால் குற்றத்திற்கு ஆளானான்.

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. அவளின் கணவன் இறந்தான்; அதனால் அவள் பெருத்துயர் அடைந்தாள்.

..................................................................................................

ஈ. அவன் சகோதரன் உள்ளான்; அவனுக்குப் பணம் கொடுத்தான்.

..................................................................................................

உ. பாலன் நன்கு கற்றவன்; எனினும் உலகியல் விடயங்களில் அசமத்தன்.

..................................................................................................

**07. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.**

அ. கைநீட்டுதல் : ..................................................................................

..................................................................................................

ஆ. காலமறிதல் : ..................................................................................

..................................................................................................

இ. கரைகாணுதல் : ..................................................................................

..................................................................................................

ஈ. கதைபிடுங்குதல் : ..................................................................................

..................................................................................................

உ. கண்வளர்தல் : ..................................................................................

..................................................................................................

**08. கீழே உள்ள மாறிக்கிடக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி திருத்தமாகப் பழமொழிகளை எழுதுங்கள்.**

அ. ஒரு பானை, ஒரு சோறு, சோற்றுக்கு, பதம்

..................................................................................................

ஆ. பிறந்தால், நியாயம், கலகம், பிறக்கும்

..................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. காரியம், சிதறாது, பதறாத

.............................................................................................................

ஈ. பறந்தாலும், ஊர்க்குருவி, உயரப், பருந்தாகுமா?

.............................................................................................................

உ. வளையாதது, ஐம்பதில், ஐந்தில், வளையுமா?

.............................................................................................................

ஊ. தன்குஞ்சு, காகத்துக்கும், பொன் குஞ்சு

.............................................................................................................

**09. பின்வரும் பழமொழிகளில் வரவேண்டிய சொற்றொடர்களைப் பொருத்தமாக அமையுங்கள்.**

அ. அரசன் எவ்வழியோ ........................................................

ஆ. சிறுதுரும்பும் ........................................................

இ. நிழலின் அருமை ........................................................

ஈ. துள்ளின மாடு ........................................................

உ. வல்லவனுக்குப் புல்லும் ........................................................

**10. கீழே தரப்பட்டுள்ள பாடலைப் படித்த பின்பு தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

## துணிவே துணை

**வறுமைப் புயலிற் சிக்கிவிடில்**
**வாழ்க்கை தன்னை வெறுப்பதுவோ?**
**சிறுமைக் குணமே நீ கொண்டு**
**சிரமே தாழ்ந்து செல்வதுவோ?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏழ்மை எம்மிற் குடி கொண்டால்**
**எதிர்த்து வெற்றி கொள்ளாமல்**
**தாழ்வுச் சிக்கல் கொண்டேங்கல்**
**தகுமோ, முறையோ, என் தோழா?**

**வறுமைப்பட்டே வாழ்ந்துலகில்**
**வளமும் புகழும் பெற்றுப்பின்**
**பெருமை பூண்டு வாழ்ந்திட்ட**
**பெரியார் வாழ்க்கை பாடமடா!**

**இன்பம் துன்பம் வாழ்வினிலே**
**இரவு பகலைப் போல் வருமே**
**துன்பம் அந்தோ மாய்ந்தோடும்**
**துணிவைத் துணையாய்க் கொண்டாலே!**

- மன்சூர் ஏ. காதர் -

அ. வறுமை எம்மைப் பற்றும்போது நாம் யாது செய்ய வேண்டும்?

.................................................................................................

ஆ. பெரியார்களது வாழ்க்கை எவ்விதம் வறுமை வாழ்க்கைக்குப் பாட மாக அமைகின்றது?

.................................................................................................

.................................................................................................

இ. மனித வாழ்வில் இன்பதுன்பம் எவ்வாறு மாறிமாறி வரும்?

.................................................................................................

ஈ. துன்பம் அந்தோவென ஓடச் செய்ய நாம் எதனைத் துணைக் கொண்டு வாழ வேண்டும்?

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. பின்வரும் சொற்களுக்கு எதிர்ச் சொற்கள் எழுதுங்கள்.**

அ. புகழ் ........................ ஈ. பெரியார் ........................

ஆ. சிறுமை ........................ உ. தாழ்வு ........................

இ. வறுமை ........................ ஊ. இன்பம் ........................

**12. கீழே தரப்பட்டுள்ள சொற்களைப் புணர்த்தி எழுதுங்கள்.**

அ. திரு + அடி = ..................................

ஆ. பூ + அரும்பு = ..................................

இ. பலா + இலை = ..................................

ஈ. பனை + ஓலை = ..................................

உ. உண்ணா + சொத்து = ..................................

ஊ. அழியா + புகழ் = ..................................

**13. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.**

அ. சாரைப்பாம்பு = ..................................

ஆ. இலங்கைத்தீவு = ..................................

இ. ஒற்றைப்பனை = ..................................

ஈ. மருத்துப்பை = ..................................

உ. கோயில் = ..................................

ஊ. கலையின்பம் = ..................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. **கீழே தரப்பட்டுள்ள உவமைத் தொடர்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.**

அ. பசுமரத்து ஆணிபோல : ..............................................................................................................................

ஆ. மீகாமன் இல்லாத மரக்கலம்போல் : ..............................................................................................................................

இ. கொழுகொம்பற்ற கொடிபோல : ..............................................................................................................................

ஈ. ஒளியைக் கண்ட இருள்போல : ..............................................................................................................................

உ. நடுவூரில் நல்லபழம் பழுத்ததைப்போல : ..............................................................................................................................

15. **கீழே தரப்பட்டுள்ள உவமைத் தொடர்களின் பொருளைக் குறிப்பிடுக.**

அ. அக்கினியில் பட்ட மெழுகுபோல ....................................

ஆ. நகமும் சதையும்போல ....................................

இ. தொட்டனைத் தூறும் மணற்கேணிபோல....................................

ஈ. இலவுகாத்த கிளிபோல ....................................

உ. கன்றைப் பிரிந்து கதறும் பசுவைப்போல....................................

16. **கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பாடப் புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுங்கள்.**

அ. மனிதனை வாழவைக்கும் உயர்ந்த பொருளாக அடக்கத்தை எவ்விதம் திருவள்ளுவர் எடுத்துக் காட்டுகிறார்?

..............................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. ‘காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம்
அதனின் ஊஉங்க இல்லை உயிர்க்கு’
மேலே உள்ள திருக்குறளின் பொருளை எழுதுக.

.................................................................................................

.................................................................................................

இ. செல்வர்க்கு மற்றொரு செல்வம் போன்றது எதுவென வள்ளுவர் எடுத்துக் காட்டுகின்றார்?

.................................................................................................

.................................................................................................

ஈ. வள்ளுவப் பெருந்தகை தீயினானால் சுட்ட புண் நாவினாற் சுட்ட புண் இவற்றிற்கு எவ்விதத்தில் வேற்றுமை காண்கிறார்?

.................................................................................................

.................................................................................................

உ. எதனைக் காக்கா விட்டாலும் நாகாக்க என வள்ளுவர் ஏன் வலியுறுத்துகின்றார்?

.................................................................................................

.................................................................................................

ஊ. ‘அடக்கமுடைமை’ என்ற தலைப்பில் ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. மலையக நாட்டார் பாடல்கள்

01. கீழே தரப்பட்டுள்ள அறிவூட்டும் கதையை வாசித்த பின்பு தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

## பாவம் கேடு விளைவிக்கும்

ஒரு துறவியிடம், பெருஞ் செல்வந்தன் ஒருவர் பேசிக் கொண்டிருந் தான். அந்தச் செல்வந்தர் மோசடி வணிகத்தாலும், பொய்யான கணக்கு வழக்குகளாலும் பெரும் பணம் சம்பாதித்தவன். துறவி சொன்னார் ''செல்வம் ஈட்டுவது முக்கியமல்ல, அதை நல்ல நேரான வழியில் ஈட்டுவது தான் நல்லது. தவறான வழியில் வரும் செல்வம் பாவம்... கேடு விளை விக்கும்'' என்றார். செல்வந்தன் சிரித்தான்! ''ஐயா எந்த வழியில் வந்தாலும் செல்வம் செல்வம் தானே. அதை ஈட்டுபவன் செல்வந்தன் தானே?'' என்றான். துறவி மறுமொழி எதுவும் பேசாது உள்ளே சென்றார். வரும் போது ஒரு குவளையில் பால் கொண்டு வந்து செல்வந்தரிடம் கொடுத்துப் பருகச் சொன்னார். பாலைப் பருகிய செல்வந்தர் முகம் சுளித்து ''ஐயா பாலில் மண்ணெண்ணெய் வாடை வருகிறதே'' என்றான்.

துறவி சொன்னார் ''அடுப்பில் நெருப்பு அணைந்து விட்டது. எனவே கைவிளக்கில் பாலைச் சூடாக்கிக் கொண்டு வந்தேன்'' என்றார். அதுதான் மண்ணெண்ணெய் வாடை வருகிறது என்றான் செல்வந்தன். ''பார்த்தீர் களா? அடுப்பில் இருப்பது நெருப்புத்தான் கைவிளக்கில் இருப்பதும் நெருப்புத்தான் இரண்டிலும் பால் சூடாகிறது. ஆனால் கைவிளக்கில் சூடாக்கினால் பாலில் விரும்பத்தகாத வாடை வருகிறதே அதே போலத் தான் தவறான வழியில் ஈட்டிய செல்வம் பாவ வாடை வீசும். அது நிலைக்காது, பாவனைக்கு அற்றது; ஈவதற்குத் தகுதி அற்றது. ''நேர்மையான வழியில் வந்த செல்வம் அடுப்பில் சூடாக்கிய பால் போன்று நல்லது'' என்றார் துறவி. **செல்வந்தர் வெட்கித் தலை குனிந்து யோசித்து நின்றார்.**

நன்றி: ஷபீனா (குமுதம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. செல்வந்தன் எவ்வழியில் பணம் சம்பாதித்தான்?

..........................................................................................

ஆ. செல்வம் எவ்வாறு ஈட்டப்படல் வேண்டுமெனத் துறவி கூறினார்?

..........................................................................................

இ. துறவி கூறியதைக் கேட்காத செல்வந்தன் என்ன கூறினான்?

..........................................................................................

ஈ. பாலைப் பருகிய பின்பு செல்வந்தன் என்ன கூறினான்?

..........................................................................................

உ. துறவி எச்சான்று மூலம் நல்ல வழியில் பணம் சம்பாதிப்பது நல்லது என்பதை விளக்கினார்?

..........................................................................................

ஊ. தவறான வழியில் ஈட்டிய செல்வத்தின் இழிவு பற்றித் துறவி எவ்வாறு விளக்கினார்?

..........................................................................................

எ. இக்கதை கூறும் படிப்பினை என்ன?

..........................................................................................

**02. கீழே தரப்பட்டுள்ள பழமொழிகளுக்கான கருத்தினைக் கட்டத்தினுள் இருந்து தெரிந்தெடுத்து எழுதுங்கள்.**

| |
|---|
| **துன்பம் தொடரும், தனக்கென ஓரிடம் இருந்தலின் சிறப்பு, வறுமையிற் செம்மை, உறவு வேறு தேவை வேறு, முயற்சியினால் உயர்ச்சி அடையலாம்.** |

அ. பாடின்றிப் பட்டமில்லை

..........................................................................................

ஆ. எலி வளையானாலும் தனிவளை வேண்டும்

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறு

..........................................................................................

ஈ. இரக்கப் போனாலும் சிறக்கப் போ

..........................................................................................

உ. பட்ட காலிலேபடும் கெட்ட குடியே கெடும்.

..........................................................................................

**03. கீழே தரப்பட்டுள்ள பழமொழிகளுக்குப் பொருத்தமான வாக்கியத்தின் கீழ்க் கீறிடுங்கள்.**

அ. **வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும்.**

1. நாம் எக்காரியத்திலும் முன்னேற்பாடாக இருத்தல் வேண்டும்.
2. வெள்ளத்துக்குப் பெரிய அணை கட்ட வேண்டும்.
3. அணையைப் போடும்போது ஆழமாகப் போட வேண்டும்.

ஆ. **அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.**

1. நாம் ஒன்றுபட்டுப் பொருள் சம்பாதிக்க வேண்டும்.
2. பாதையில் திரண்டு செல்லக் கூடாது.
3. ஒற்றுமையே பலம்.

இ. **பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு.**

1. பெற்றமனம் கல்லுப் போன்றது.
2. தாய் அன்பு உயர்வானது.
3. பிள்ளையைத் தாயே வளர்த்தெடுக்கிறாள்.

ஈ. **பாத்திரம் அறிந்து பிச்சை போடு.**

1. பாத்திரத்தில் போடக்கூடிய அளவு பிச்சை போட வேண்டும்.
2. ஏற்பவரின் தகுதி கண்டு உதவுக.
3. ஐயம் இட்டு உண்.

உ. **கோழி மிதித்துக் குஞ்சு சாகுமா?**

1. கோழி குஞ்சை மிதிக்காது.
2. அன்புக் கண்டனம் அழிக்காது.
3. கெடுவான் கேடு நினைப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. பின்வரும் சொற்களுக்கு எதிர்ப்பொருள் எழுதுங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| அ. உயர்வு | ........................ | உ. குழப்பம் | ........................ |
| ஆ. கொழுத்த | ........................ | ஊ. முதுமை | ........................ |
| இ. தூக்கம் | ........................ | எ. தண்மை | ........................ |
| ஈ. சிற்றறிவு | ........................ | ஏ. ஆதி | ........................ |

**05. பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் எழுதுங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| அ. ஒளி | ........................ | உ. நாணம் | ........................ |
| ஆ. மேகம் | ........................ | ஊ. தாரகை | ........................ |
| இ. பரிசு | ........................ | எ. படித்தான் | ........................ |
| ஈ. எறிதல் | ........................ | ஏ. மலர்தல் | ........................ |

**06. தடித்த எழுத்தில் உள்ள சொல்லுக்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுங்கள்.**

அ. **தலையால் நடத்தல்** என்பதன் பொருள்
**(எதிர்த்துப் பேசுதல், முறைதவறி நடத்தல், வீண் முயற்சி)**

ஆ. **யான்** என்ற சொல்லின் இரண்டாம் வேற்றுமை வடிவம்
**(யானை. என்னை, நம்மை, நான்)**

இ. பின்வருவனவற்றில் ஏவல் வாக்கியம்
1. பொய்மையாக நினைத்தாயோ?
2. உயர்வாய் இல்லை என்பாயோ?
3. ஆகா மனிதா, முயற்சியில் ஈடுபடு

ஈ. **சேய்மை** என்பதன் எதிர்ப்பொருட் சொல்
**(நொய்மை, அண்மை, மெய்ம்மை)**

உ. சூரியன் **மறைந்தான்** என்பதன் கருத்து
**(இறந்தான், அஸ்தமித்தான், தோன்றினான்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. **கீழ்வருவனவற்றைத் தொடர்புபடுத்துங்கள்.**

| | | |
|---|---|---|
| அ. | குணப்பெயர் கொண்ட சொல் | வட்டம் |
| ஆ. | தொழிற்பெயருக்கு உதாரணம் | மரம் |
| இ. | வினைச் சொல் அற்ற சொல் | நிலம் |
| ஈ. | இடப்பெயருக்கு உதாரணம் | வந்தானை |
| உ. | வினைச் சொல்லுக்கு உதாரணம் | நின்றேன் |

08. **பொருத்தமான மரபுச் சொற்களின் கீழ்க் கீறிடுங்கள்.**

அ. நண்டின் ஆணைக் குறிப்பது
(பலவன், கலவன், அலவன், வலவன்)

Class No: 894.811
Acc No 328

ஆ. களிறு எனப்படும் ஆண் இனம்
(பசு, மான், யானை, குதிரை)

இ. நாகு எனப்படும் பெண் இனம்
(பிடி, பிணவு, பசு, ஆடு)

ஈ. கற்றாளையின் உள்ளீடு
(சதை, சோறு, களை, பருப்பு)

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

உ. மாவின் இளங்காய்
(நடு, வடு, பிஞ்சு, விதை)

09. **பின்வரும் மரபுத் தொடர்களைத் தொடர்புபடுத்துங்கள்.**

| | | |
|---|---|---|
| அ. | தோள் கொடுத்தல் | மகிழ்வடைதல் |
| ஆ. | தலைகவிழ்தல் | வஞ்சித்தல் |
| இ. | நாக்கு வளைத்தல் | உதவி செய்தல் |
| ஈ. | காது குத்துதல் | இகழ்தல் |
| உ. | உச்சி குளிர்தல் | வெட்கமடைதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியது எது?

அரியது கேட்கின் வரிவடி வேலோய்!
அரிது அரிது மானிடர் ஆதல் அரிது
மானிடர் ஆயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செயல் அரிது
தானமும் தவமும் தான் செய்வ ராயின்
வானவர் நாடு வழி திறந் திடுமே.

(இவ்வுலகத்தில் அரியது எது? என்று வினவினால் உடல், ஊனம் அற்ற மக்களாகப் பிறவி எடுப்பது அரியது; அரியது; அரியது ஆகும்)

**10. பின்வருவன சொற்றொடராயின் 'சொ' எனவும் வாக்கியமாயின் 'வா' எனவும் அடைப்பினுள் எழுதவும்.**

அ. வீட்டிலே இருந்து சிறுமிகள் ஓடி வந்தார்கள். (.........)

ஆ. தெருவின் புறத்திலே நீரோடும் வாய்க்கால்கள் உண்டு. (.........)

இ. மாதவன் இவ்வாறு சொல்லி முடித்தபோது. (.........)

ஈ. கப்பல் தண்ணீரில் ஓடுவதைப் பார்க்க. (.........)

உ. முஹைதீனுக்கு ஒரே சிரிப்பு. (.........)

**11. பின்வரும் வியங்கோள் வினைகளை வைத்து வாக்கியம் அமையுங்கள்.**

அ. வாழ்க : ..............................................................................

..............................................................................................



Arasady Public Library Municipal Council
Class No: Acc No:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. தருக : ..............................................................................

..............................................................................

இ. செய்க : ..............................................................................

..............................................................................

ஈ. ஒழிக : ..............................................................................

..............................................................................

உ. ஓங்குக : ..............................................................................

..............................................................................

**12. பின்வரும் வாக்கியங்களுக்குரிய எழுவாய் சொற்களை எழுதுங்கள்.**

அ. ........................................ வயலில் இருந்து ஓடிச் சென்றன.

ஆ. வாணி விழாவுக்கு .............................. தலைமை தாங்கினாள்.

இ. ஆசிரியரின் வினாவுக்கு .............................. பதில் கூறினார்கள்.

ஈ. ........................................ வீணை நன்றாக வாசித்தாள்.

உ. மிகவும் அழகாக இருக்கிறாய் ........................................

**13. பின்வரும் வினைமுற்றுகளை வைத்து இடைவெளிகளை நிரப்புங்கள்.**

அ. நான் வைகறையில் நித்திரை விட்டு ..................................

ஆ. நீங்கள் எப்பொழுதும் உற்சாகமாக ..................................

இ. நீர் எப்பொழுதும் உண்மை பேச ..................................

ஈ. நாங்கள் பாடசாலைக்குச் ..................................

உ. நீவிர் அனைவரும் இங்கே ..................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. **பின்வரும் அடுக்குத் தொடர்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமையுங்கள்.**

அ. துளிதுளி : ...................................................................................................................................................

ஆ. நல்லநல்ல : ...................................................................................................................................................

இ. தாரைதாரை : ...................................................................................................................................................

ஈ. அசைந்து அசைந்து : ...................................................................................................................................................

உ. கண்டகண்ட : ...................................................................................................................................................

15. **பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுங்கள்.**

அ. சிவன் + ஆலயம் = ......................................

ஆ. சூரியன் + உதயம் = ......................................

இ. மரம் + கொத்தி = ......................................

ஈ. மூன்று + புரம் = ......................................

உ. புலவர் + இடத்து = ......................................

இ. சனி + ஈஸ்வரன் = ......................................

ஈ. பிணம் + தின்னும் = ......................................

உ. வனம் + விலங்கு = ......................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. **பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.**

அ. மரத்தூண் = ..................................

ஆ. வரந்தருவாய் = ..................................

இ. உண்ணுஞ்சோறு = ..................................

ஈ. மனக்கோட்டை = ..................................

உ. பட்டாடை = ..................................

ஊ. பாலைப்பழம் = ..................................

17. **பின்வரும் விடுகதைகளுக்கு விடை எழுதுங்கள்.**

அ. பிணம் வேகும் துணிவேகாது அது என்ன?

..........................................................................................................

ஆ. கிளை இல்லாத மரத்திலே நூறு தேனீ குடியிருக்கிறது அது என்ன?

..........................................................................................................

இ. பகலில் சுருளுவாள், இரவில் நீளுவாள் அது என்ன?

..........................................................................................................

ஈ. மனிதன் செய்யாத குடை, மழைக்குப் பிடிக்காத குடை என்ன?

..........................................................................................................

உ. வெள்ளைச் சிறையில் மஞ்சள் அழகி அடங்கிக் கிடக்கிறாள் அவள் யார்?

..........................................................................................................

ஊ. முட்டையிடும் அடைகாக்காது, கூட்டில் குடியிருக்கும் கூடு கட்டாது அது என்ன?

..........................................................................................................

ஊ. பரட்டைத்தலை மாமியாருக்குப் பவளம் போல் மருமகள் அவள் யார்?

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**18. கீழே கட்டத்தில் உள்ள பொருத்தமான உவமைத் தொடரைத் தெரிந்தெடுத்துக் கீறிட்ட இடத்தை நிரப்புங்கள்.**

| | |
|---|---|
| **உள்ளங்கை நெல்லிக்கனி போல,** | **அடியற்ற மரம்போல,** |
| **ஆடி ஓய்ந்த பம்பரம் போல,** | **புலியோசை கேட்ட மான் போல,** |
| **பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல** | |

அ. துச்சாதனன் சத்தமிட்டபடி பாஞ்சாலியைப் பிடித்து இழுத்த போது ............................. அவள் நடுங்கினாள்.

ஆ. மகனுக்கு மருத்துவபீடம் கிடைத்து விட்டது என மனமகிழ்ந்த தந்தைக்கு, மகளாரும் பரீட்சையில் விசேட சித்தி பெற்றுள்ளதை அவ்வேளையில் கேட்டபோது ............................. இன்பமுற்றார்.

இ. இராமனது அம்புபட்டதும் வாலி .................. நிலத்தில் சாய்ந்தான்.

ஈ. வயோதிபரின் வாழ்வு ....................... அடங்கத் தொடங்கியது.

உ. படித்தால் பலன் கிடைக்கும் என்பது ......................................... எமக்குத் தெரிகிறது.

**19. பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான பழமொழிகளின் கீழ்க் கீறிடுங்கள்.**

அ. நாம் செய்கின்ற நற்கருமங்கள் பின்னுக்கு உதவும் என்பதை உணர்த்தும் பழமொழி

1. மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை.
2. பாடை ஏறினும் ஏடது கைவிடேல்.
3. தருமம் தலைகாக்கும்.
4. எறும்பு ஊரக் கற்குழியும்.

ஆ. நாம் ஒரு செயலைச் செய்ய முனையும்போது அதன் தகுதி கண்டே செய்ய வேண்டும்.

1. நல்ல மரத்துக்கு ஒரு புல்லுருவி.
2. பணம் பாதாளம் மட்டும் பாயும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பாத்திரம் அறிந்து பிச்சை கொடு.
4. ஊரோடு ஒத்து வாழ்.

இ. நாம் இப்பொழுது செய்யும் காரியங்களுக்கான பலனைப் பின்னர் அனுபவிப்போம்.
1. குறைகுடம் தளம்பும் நிறைகுடம் தளம்பாது.
2. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
3. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
4. பேராசை பெருந் தரித்திரம்.

ஈ. சிறு உதவி செய்தோரையும் எந்நேரத்திலும் மறவற்க.
1. ஊரோடு ஒத்து வாழ்.
2. இனம் இனத்தைச் சாரும்.
3. ஆசை வெட்கம் அறியாது.
4. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

உ. மனநிறைவே எப்பொழுதும் உயர்வானது
1. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.
2. பேராசை பெருந்தரித்திரம்.
3. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
4. வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும்.

**20. பின்வரும் சொற்களுக்கு ஒத்த பொருள் எழுதுங்கள்.**

அ. சத்தியம் ........................ ஈ. பொறை ........................

ஆ. ஞானம் ........................ உ. சமர் ........................

இ. பாராட்டுதல்........................ ஊ. புகழ் ........................

**21. பின்வரும் சொற்களுக்கு எதிர்ப்பாற் சொற்கள் எழுதுங்கள்.**

அ. குரு ........................ ஈ. தேவன் ........................

ஆ. ஈசன் ........................ உ. பண்டிதன் ........................

இ. காவற்காரி........................ ஊ. கனவான் ........................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. **பின்வரும் சொற்களுக்கு எதிர்ப்பொருள் சொற்கள் எழுதுங்கள்.**

அ. ஊடல் ........................ ஈ. சுவர்க்கம் ........................

ஆ. நம்பிக்கை ........................ உ. நல்லது ........................

இ. மங்கலம் ........................ ஊ. செறிவு ........................

23. **கீழே கட்டத்துள் தரப்பட்டுள்ள சொற் கூட்டங்களில் உள்ள சொற்களை இனங்கண்ட பின் அட்டவணையை நிரப்புங்கள்.**

கடந்தேன் வளைத்தான் இனிமையானது

வளர்க்கப்பட்டு நடத்துகின்ற முடித்தார்

படித்து நடக்க செய்யும் நடந்த

| | முற்றுவினை | எச்சவினை |
|---|---|---|
| அ. | ............................ | ............................ |
| ஆ. | ............................ | ............................ |
| இ. | ............................ | ............................ |
| ஈ. | ............................ | ............................ |
| உ. | ............................ | ............................ |

24. **பின்வரும் அடுக்குமொழிகளை வைத்து வாக்கியம் அமையுங்கள்.**

அ. தடவித்தடவி : ........................................................................

........................................................................

ஆ. குனிந்துகுனிந்து : ........................................................................

........................................................................

இ. ஊற்றிஊற்றி : ........................................................................

........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. விம்மிவிம்மி : ..................................................................................

..........................................................................................................

உ. சுற்றிச்சுற்றி : ..................................................................................

..........................................................................................................

**25. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் பொருத்தமற்ற சொல்லின் கீழ்க் கீறிடுங்கள்.**

அ. சினம் (முனிவு, சீற்றம், குன்று, வெகுளி)

ஆ. தாமரை (சிகரம், அம்புயம், கமலம், பங்கயம்)

இ. சூரியன் (தினகரன், பகலவன், வெய்யோன், விண்மீன்)

ஈ. இறத்தல் (சாதல், முறுவல், மடிதல், மாய்தல்)

உ. ஒளி (சுடர், பிரகாசம், கலம், வெளிச்சம்)

**26. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( X ) எனவும் அடையாளமிடுங்கள்.**

அ. வினையாவது காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலை வினைகள் ஆகும். (.........)

ஆ. பார்த்தான் என்பது குறிப்பு வினையாகும். (.........)

இ. தெரிநிலை வினைகள் பெரும்பாலும் வினையடிகளில் இருந்தே பிறக்கின்றன. (.........)

ஈ. தெரிநிலை வினைமுற்றுக்களும் காலத்தை உணர்த்துகின்றன. (.........)

உ. தெரிநிலை வினைமுற்றுக்கள் 'ப், வ்' என்ற இடைநிலையாலும் 'உம்' என்ற விகுதியாலும் எதிர்காலத்தை உணர்த்தும். (.........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**27. கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பாடப் புத்தகத்தை அடிப் படையாகக் கொண்டு விடை எழுதுங்கள்.**

அ. நாட்டார் பாடல்கள் என்றால் என்ன?

.................................................................................................

ஆ. நாட்டார் பாடல்கள் வேறு எப்பெயர்களில் வழங்கி வருகின்றன?

.................................................................................................

இ. நாட்டார் பாடல்களில் சில மலையக மக்களின் எந்நிலையை உணர்த்தி நிற்கின்றன?

.................................................................................................

ஈ. தென்னிந்திய மலையக மக்கள் எவற்றைச் சுமந்து வந்தனர் எனக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது?

.................................................................................................

உ. நாட்டார் பாடல்களின் வகைகள் எவை?

.................................................................................................

ஊ. மலையக நாட்டார் பாடல்கள் எவற்றை வெளிபடுத்துவனவாக அமைந்துள்ளன?

.................................................................................................

**28. கீழே தரப்பட்டுள்ள மரபுத்தொடர்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.**

அ. கொள்ளிசொருகுதல் : ...........................................................................

.................................................................................................

ஆ. குதிரைக்கொம்பு : ...............................................................................

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. வாயைக்கட்டுதல் : ..............................................................................
..........................................................................................................

ஈ. வெட்டிப்பேச்சு : ...................................................................................
..........................................................................................................

உ. இழுத்தடித்தல் : ...................................................................................
..........................................................................................................

**29. கீழே தரப்பட்டுள்ள மரபுத் தொடர்கள் உணர்த்தும் பொருளைத் தருக.**

அ. அக்கரைபச்சை - ......................................

ஆ. ஒத்துப்பாடுதல் - ......................................

இ. கங்கணங்கட்டுதல் - ......................................

ஈ. முகங்கடுத்தல் - ......................................

உ. தலையெடுத்தல் - ......................................

ஊ. பகற்கனவு - ......................................

**30. பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிந்தெடுத்துக் கட்டுரை எழுதுங்கள். (பயிற்சிக் கொப்பியைப் பயன்படுத்தவும்)**

அ. காலத்தின் அருமை

ஆ. தாய்மொழியின் சிறப்பு

இ. எமது நாட்டுக்கு இன்று தேவை சமாதானமே

ஈ. எனது வாழ்க்கையின் இலக்கு

உ. எமது நாட்டின் இயற்கை அழகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. உமது நண்பன் அல்லது நண்பி பரீட்சையில் விசேட சித்தி அடைந்துள்ளார். இதனைக் கருத்தில் கொண்டு உமது மகிழ் வினையும், பாராட்டையும் கூறிக் கடிதம் ஒன்று எழுதுக.

32. நீர் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்றுள்ளீர் என்ற மகிழ்வைத் தெரிவித்து மாமாவுக்குக் கடிதமொன்று எழுதுக.

33. **கத்தும் கடல் சூழ் நாகைக் காத்தான் தன் சத்திரத்தில்**
**அத்தமிக்கும் போதில் அரிசி வரும் - குத்தி**
**அன்னம் உடலையிலிட ஊர் உறங்கும் ஓர் அகப்பை**
**இலையிலிட வெள்ளி எழும்**

- ஔவையார்

அ. காத்தானது சத்திரத்தில் சோறு சமையல், ஆயத்தம் உலையிலிடல், பரிமாறல் என்பவற்றின் நேரம் தொடர்பாகப் பாடலில் எவ்வாறு நகைப்புறக் காட்டப்பட்டுள்ளது என்பதை உமது உரைநடையில் எழுதுக.

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

ஆ. சத்திரத்துக்கு அரிசி எப்போது வரும்?

.....................................................................................................

.....................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழித்திறன் விருத்திக்கான அலகுப் பரீட்சைகள்

## அலகுப் பரீட்சை - 1

01. கீழே தரப்பட்டுள்ள சொற்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.

அ. அதிசயம் : ..........................................................................................

..........................................................................................................

ஆ. அதிட்டம் : ..........................................................................................

..........................................................................................................

இ. அண்மை : ..........................................................................................

..........................................................................................................

ஈ. அடைக்கலம் : ......................................................................................

..........................................................................................................

02. பின்வரும் சொற்களைப் பொருள் விளங்க வாக்கியங்களில் உள்ள இடைவெளிகளில் அமைக்குக.

| ஒன்றாமை | கனகம் | கிங்கிணி | கழனிகள் | கானகம் | ஒள்ளியன் |
|---|---|---|---|---|---|

அ. பாரி மன்னன் மிகுந்த ............................ ஆக விளங்கினான்.

ஆ. மூவேந்தருள்ளும் அடிக்கடி .......................... ஏற்பட்டுள்ளமையை தமிழர் வரலாறுகள் இயம்புகின்றன.

இ. பருவகால மழையின்மையால் ...................... பயிரிடப்படாது. காணப்பட்டது.

ஈ. தென் அமெரிக்காவிலே ........................ விளையும் நிலங்கள் நிறைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. இராமன், கைகேகியின் வரத்தை நிறைவு செய்யக் ...................... சென்றான்.

ஊ. நடனமாதின் .................................. ஒலிகேட்டு மக்கள் கூடினர்.

| | | | |
|---|---|---|---|
| ஒள்ளியன் - அறிவுமிக்கவன் | | கனகம் | - பொன் |
| ஒன்றாமை - பகைமை | | கானகம் | - காடு |
| கழனிகள் - வயல்கள் | | கிங்கிணி | - சதங்கை |

03. கீழே தரப்பட்டுள்ள பாடலைப் படித்த பின்பு தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

## காலைப்பொழுது

**கூரிரு ளகன்றது கூவின கோழி**
**குருவிக ளெழுந்தன மறைந்தன விண்மீன்**
**ஏரியிற் றாமரை யினமலர் மலரும்**
**இறையவன் கோவிலில் மணியொலி கேட்கும்**
**ஊரினிற் றொழில்புரி மாந்தர்க ளெழுந்தார்**
**உயர்மரக் கொம்புவிட் டோடின காக்கை**
**சேர்கிழக் கெனும்திசை வெளுத்ததுமெல்லச்**
**செங்கதி ரவனுத யஞ்செய்கி றானே.**

**சீர்பெறு முற்றங்கள் கூட்டுகின் றார்கள்**
**சிறப்புறச் சாணநீர் தெளித்திடு கின்றார்**
**நேர்பெறு நறுமணப் புகையிடு கின்றார்**
**நித்திரை நீங்கியே சிறுவரு மெழுந்தார்**
**நீரினிற் கான்முகங் கழுவியே கடவுள்**
**நிறை மலர்ச் சேவடி யிணைதொழு கின்றார்**
**சேர்கிழக் கெனுந்திசை சுடரொளி பரப்பிச்**
**செங்கதி ரவனுத யஞ்செய்கி றானே**

- சோமசுந்தரப் புலவர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. இருள் அகல எழுந்த பறவைகள் எவை?

..........................................................................................

ஆ. ஏரி, கோயில் என்பவற்றில் காலையில் என்ன நிகழ்கிறது?

..........................................................................................

இ. காலையில் காகங்கள் யாது செய்தன?

..........................................................................................

ஈ. தொழிலாளர்கள் யாது செய்தனர்?

..........................................................................................

உ. காலையின் உதயம் செய்தது எது?

..........................................................................................

ஊ. இரண்டாவது பாடலில் மாந்தர்கள் காலையின் எச் செயல்களைச் செய்கின்றனர்?

..........................................................................................

..........................................................................................

எ. சிறுவர்கள் நித்திரையில் இருந்து நீங்கி என்ன செய்கின்றார்கள்?

..........................................................................................

ஏ. சூரியன் எதனைப் பரப்பி உதயம் செய்கின்றான்?

..........................................................................................

**04. கீழே தரப்பட்டுள்ள சொற்களைத் தரப்பட்டுள்ள மரபுத் தொடருக்குப் பொருத்தமாக வைத்து நிரப்புங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| ஓய்ந்திருத்தல் | பின்பற்றுதல் | முறை தவறி நடத்தல் | வாய்புலம்பல் |
| உதவிசெய்தல் | இணங்கிக்கேட்டல் | ஏவிவிடல் | ஆபத்தில்கைவிடுதல் |

அ. அடியொற்றுதல் - ..............................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. கண்காட்டிவிடல் - ..............................................

இ. காலாறுதல் - ..............................................

ஈ. கை தாங்குதல் - ..............................................

உ. செவி சாய்த்தல் - ..............................................

ஊ. தலைகீழாய் நடத்தல்- ..............................................

எ. பிதற்றுதல் - ..............................................

ஏ. நட்டாற்றில் விடுதல் - ..............................................

**05. சரியான விடையின் கீழ்க் கோடு இடுக.**

அ. மரபுத் தொடர்கள் உணர்த்துவன.
**(வெளிப்படைப் பொருளை, குறிப்புப் பொருளை, வேற்றுமைப் பொருளை, உவமைப் பொருளை)**

ஆ. செயலை முடிக்க முனைந்து நிற்றல்
**(கைகட்டல், ஒற்றைக்காலில் நிற்றல், கங்கணம் கட்டல், கைகொடுத்தல்)**

இ. ஆழம் பார்த்தல்
**(அளவெடுத்தல், பரிசோதனை செய்தல், சந்தேகம் கொள்ளல், அறிவு முதலியவைகளை ஆராய்தல்)**

ஈ. கழுத்துக் கொடுத்தல்
**(கச்சை கட்டுதல், கொட்டமடித்தல், கைகொடுத்தல், மல்லுக் கட்டுதல்)**

உ. ஒரு தொழிலை மனமின்றிக் கடமைக்காகச் செய்தல்
**(கடன் கழித்தல், கள்ளேடுவிடுதல், ஆறப்போடுதல், கை விடுதல்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ. 'உப்பில்லாப் பேச்சு' என்பது (சுவையில்லாத பேச்சு, நம்ப முடியாத பேச்சு, பயனற்ற பேச்சு, அறியாமைப் பேச்சு) ஆகும்.

**06. கீழே தரப்பட்டுள்ள உவமைத் தொடர்களைப் பொருள் விளங்க வாக்கியம் அமையுங்கள்.**

அ. இலவுகாத்த கிளிபோல : ..............................................................................................................................................

ஆ. காட்டுத்தீ போல : ..............................................................................................................................................

இ. ஊமைகண்ட கனவுபோல : ..............................................................................................................................................

ஈ. உயிரும் உடலும்போல : ..............................................................................................................................................

உ. குரங்கின் கைப்பூமாலை போல : ..............................................................................................................................................

**07. பின்வரும் சொற்களைப் பொருள் விளங்க வாக்கியங்களில் உள்ள இடைவெளிகளில் அமைக்குக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நறுநறு | குறுகுறு | சிடுசிடு | கிளுகிளு | கிடுகிடு | படபட |

அ. மகிழ்ச்சியால் அவளுடைய உள்ளம் ............................... த்தது.

ஆ. பயத்தினால் நெஞ்சு ................................... என அடித்தது.

இ. அசுரன் ................................... எனப் பற்களைக் கடித்தான்.

ஈ. கடுங்குளிரால் ....................................... என நடுங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. குற்றமுள்ள நெஞ்சு .................................. க்கும்.

ஊ. ............................ ப்பும் சினமும் சினேகிதத்துக்குப் பங்கம்.

**08. கீழே தரப்பட்டுள்ள பாடலைப் படித்த பின்பு தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

## கிளி

**சின்னஞ் சிறுவுடலாம் கூர்ந்த**
**செங்கனி போல் அலகாம்**
**வன்னப் பசுஞ் சிறகாம் - இரு**
**மாயக் கருவிழியாம்**

**சன்னக் குறுங்காலாம் - இந்தச்**
**சாந்தக்கிளி போலே**
**என்னுயிர் வாழாதோ - கவலை**
**யின்றித் திரியாதோ**

- யோகி சுத்தானந்தர் -

அ. கிளியின் உருவம் எவ்வாறு உவமிக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளது?
..............................................................................................................
..............................................................................................................

ஆ. 'வன்னப் பசுஞ்சிறகாம்....' என்பதன் பொருள் யாது?
..............................................................................................................

இ. கிளியின் கண்களின் அழகு எவ்விதம் உவமிக்கப்பட்டுள்ளது?
..............................................................................................................

ஈ. தனது உயிர் எவ்விதம் வாழவேண்டும் எனக் கவிஞர் விரும்புகிறார்?
..............................................................................................................

உ. இப்பாடலைப் பாடிய கவிஞர் யார்?
..............................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகுப் பரீட்சை - 2

### சொல்லொழுக்கம்

மனிதப் பிறப்பு மிக உயர்ந்தது. அவ் உயர்வுக்கு ஒரு காரணம் மக்கள் பேச்சாற்றல் பெற்றிருப்பது.

மனிதன் ஏன் பேசுகின்றான்? தன் கருத்தை மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்காகப் பேசுகின்றான் என்று பொதுவாக நினைத்துக் கொண்டிருக்கின்றோம். மொழியின் நோக்கம் கருத்துப் பரிமாறிக் கொள்வதன்று, காரியம் பரிமாறிக் கொள்வது. செய்தி தெரிவிப்பதற்காகப் பேசவில்லை. மக்கள் வாய் செய்தித்தாள் இல்லை. செய்தியைச் சொல்லிச் சில காரியம் முடித்துக் கொள்வதற்காகப் பேசுகின்றோம். இதுவே மொழியின் பயன்.

காரியம் முடித்துக் கொள்வதற்குப் பேச்சு வேண்டும் என்றால் அப்பேச்சுக்கு ஒரு நற்பண்பு வேண்டும். தண்ணீராலன்றி வெந்நீரால் பயிர் விளையாது. இன்சொல்லான்றி வன்சொல்லால் காரியம் முடியாது. அதுதான் பேச்சொழுக்கம். யாரிடத்தில் பேசினாலும் எந்நிலையிற் பேசினாலும் எவ்வாறு பேசினாலும் 'பணிவுடையன் இன்சொலனாதல்' வேண்டும். இதுதான் நன்மனிதன் என்பது காட்டும் நாகரிக அடையாளம். 'பண்பு என்ற தடத்தினின்று பேச்சு என்ற நடைவண்டி விலகக் கூடாது' என்றார் வள்ளுவப் பெருந்தகை.

**01. மேலே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்த பின்பு வினாக்களுக்கு விடை தருக.**

அ. மனிதப் பிறப்பின் உயர்வுக்குக் காரணம் யாது?

..........................................................................................................

ஆ. மொழியின் நோக்கம் எதுவெனக் கூறப்பட்டுள்ளது?

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. நாம் ஏன் பேசுகின்றோம்?

..........................................................................................

ஈ. மொழியின் பயன் யாது?

..........................................................................................

உ. பயிர் எந்நீரால் விளையும்?

..........................................................................................

ஊ. பேச்சு எவ்விதம் அமைய வேண்டுமென வள்ளுவர் கூறினார்?

..........................................................................................

எ. நன்மனிதனின் நாகரிக அடையாளம் எது?

..........................................................................................

**02. தடித்த எழுத்தில் உள்ள சொல்லின் கருத்துள்ள சொல்லை அடைப்புக் குறிக்குள் தெரிந்து கீறிடுக.**

அ. மாமனார் **முறுவல்** செய்தார்.
(முறுக்கினார், சிரித்தார், சண்டையிட்டார்)

ஆ. **நாணில்** அம்பை ஏற்று
(நாணத்தில், வெட்கத்தில், கயிற்றில்)

இ. **திறமை** சோதிக்கப்பட்டது.
(வறுமை, புகழ், கெட்டித்தனம்)

ஈ. எல்லோரும் **ஆரவாரம்** செய்தனர்.
(குழப்பம், சத்தம், கேலி)

உ. அதிகாரி **இல்லம்** அடைந்தார்.
(வீடு, நாடு, தேசம்)

ஊ. நான் **குழலிலே** சூட்டுவேன்.
(பிட்டுக்குழலிலே, கூந்தலிலே, புல்லாங்குழலிலே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. **பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுங்கள்.**

அ. சீா + உடை = ........................................

ஆ. நீதி + அமைச்சு = ........................................

இ. இரண்டு + ஆயிரம் = ........................................

ஈ. குடி + ஏற்றம் = ........................................

உ. இடை + இடையே = ........................................

04. **அவன், அவள், அவர், அவர்கள், அது, அவைகள் என்பன படர்க்கைப் பெயர்களாகும். இச்சொற்களைக் கொண்டு வாக்கிய இடைவெளிகளை நிரப்புங்கள்.**

அ. .................. அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டிருக்கிறான்.

ஆ. .................. சுற்றுலாச் சென்று வந்தனர்.

இ. .................. நான்கு வருடமாக நோய்வாய்ப் பட்டுள்ளார்.

ஈ. .................. ஒரு பறவை ஆகும்.

உ. .................. எப்பொழுதும் உண்மையே பேசுவார்.

ஊ. .................. அனைத்தும் மணமுள்ள மலர்களே.

05. **பின்வரும் வர்ககியங்களிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுதுங்கள்.**

அ. நானும் நீயும் கோயிலுக்குச் சென்றேன்.

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. நீயும் அவனும் பந்து அடித்தான்.

..........................................................................................................

இ. நானும் நீயும் பாட்டுப் பாடினார்கள்.

..........................................................................................................

ஈ. நாங்களும் நீங்களும் நாடகம் நடித்தீர்கள்.

..........................................................................................................

உ. நீங்களும் அவர்களும் பாடம் படித்தேன்.

..........................................................................................................

06. கீழே தரப்பட்டுள்ள பாடலைப் படித்த பின்பு தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

## சுற்றுப்புறச் சூழலைக் காத்திடுவோம்!

சுற்றுப் புறத்தைப் பாதுகாத்தே
தூய்மையாக வைத்திருப்போம்!
வெற்றிட மின்றிக் குவித்து வைக்கும்
வேண்டாக் குப்பையைத் தவிர்த்திடுவோம்!

தொற்றும் கிருமிகள் சேராமல்
தொல்லைகள் அதனால் தொடராமல்
முற்றும் மாசினை ஒழித்திடுவோம்
முனைந்தே அனைவரும் செயற்படுவோம்

வீதியில் சாலையில் வாகனங்கள்
வெளியிடும் புகையால் உடல்நலங்கள்
பாதிக்கும் நிலை உண்டாகும்
பரப்பு கின்ற ஒலியாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காதினில் இரைச்சலை ஏற்படுத்தும்!**
**கவனமும் சிதறும் அறிந்திடுவோம்!**
**மேதினி யில்சுற் றுப்புறத்தை**
**மேன்மை யாகவே வைத்திருப்போம்!**

- பூங்கோவன் -

**வெற்றிடம்** - காலியிடம்; **முனைந்து** - ஈடுபட்டு; **மேதினி** - உலகம்

அ. சுற்றுப்புறத்தைக் காக்க எதனைத் தவிர்த்திடுவோம் எனக் கவிஞர் குறிப்பிடுகிறார்?

..........................................................................................

ஆ. தொற்றும் கிருமித் தொல்லையில் இருந்து தப்ப, முற்றும் ஒழிக்க வேண்டியது எது?

..........................................................................................

இ. வீதியில் சாலையில் வானங்கள் விடும் புகையால் ஏற்படும் தீமைகள் யாது?

..........................................................................................

ஈ. வீதியில் வாகனங்களின் ஒலியால் ஏற்படும் பாதிப்புகள் எவை?

..........................................................................................

**07. பின்வரும் லகர, ளகர, ழகர பேதச் சொற்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.**

அ. உலவு : ..........................................................................
உழவு : ..........................................................................
உளவு : ..........................................................................

ஆ. அலை : ..........................................................................
அழை : ..........................................................................
அளை : ..........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. சூல் : ..........................................................................
சூள் : ..........................................................................
சூழ் : ..........................................................................

08. **கீழே தரப்பட்டுள்ள அறுவகைப் பெயர்ச் சொற்களுக்கும் உதாரணம் இரண்டு தருக.**

அ. பொருட் பெயர் - ..........................................................

ஆ. இடப் பெயர் - ..........................................................

இ. காலப் பெயர் - ..........................................................

ஈ. சினைப் பெயர் - ..........................................................

உ. குணப் பெயர் - ..........................................................

ஊ. தொழிற் பெயர் - ..........................................................

09. **கீழே தரப்பட்டுள்ள பெயர்ச் சொற்களைத் தொடர்புபடுத்துங்கள்.**

| | |
|---|---|
| அ. இடுகுறிப்பெயர் | நாற்காலி, வளையல், மண்வெட்டி |
| ஆ. காரணப்பெயர் | பறவை, வளையம், கணக்காளன் |
| இ. காரணஇடுகுறிப்பெயர் | வீடு, பாலம், குடை |

10. **கீழ்வரும் தலைப்பில் (பயிற்சிக் கொப்பியில்) கட்டுரை எழுதுக.**

அ. காலை நேரக் கடற்கரைக் காட்சி.

ஆ. காலை நேர மலையகக் காட்சி.

இ. காலை நேர வயற்காட்சி.

ஈ. காலை நேர சுற்றாடல் காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகுப் பரீட்சை - 8

01. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.

அ. பிறப்பொக்கும் = ......................................

ஆ. ஆற்றுமுதவி = ......................................

இ. உழுதுண்டு = ......................................

ஈ. முகந்திரிந்து = ......................................

உ. இயன்றதறம் = ......................................

ஊ. மற்றெல்லாம் = ......................................

எ. தானுண்டல் = ......................................

ஏ. மருந்தெனினும் = ......................................

02. கீழே தரப்பட்டுள்ள பாடலைப் படித்த பின்பு தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

### பெற்றோர் பெருமை

**ஈன்று வளர்த்த தாய்தந்தைக் (கு)**
**எவரே கைம்மா (று) இயற்றிடுவார்**
**ஆன்ற மதலை நூறு வய (து)**
**அளவும் அடிமைத் திறம் பூண்டு**
**மூன்று புவனத் துள்ளபொருள்**
**முற்றும் அளித்து முறைமுறையே**
**ஏன்று வழிபா (டு) இயற்றிடினும்**
**ஒருநாள் வளர்த்தற் (கு) இயையாதே!**

- வேதநாயகம் பிள்ளை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'நீதி நூல் திரட்டு'** என்னும் நூலில் உள்ள **'தாய் தந்தையரை வணங்கல்'** என்னும் அதிகாரத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது.

**ஈன்று** - பெற்று; **கைம்மாறு** - பதிலுதவி; **மதலை** - குழந்தை; **புவனம்** - உலகம்; **ஏன்று** - ஏற்று; **இயையாது** - ஈடாகாது.

## தெளிவுரை

தம்மைப் பெற்று, வளர்த்து, காத்த பெற்றோர்க்கு எவரால் பதில் உதவி செய்திட முடியும்? சிறந்த குணங்களைக் கொண்ட குழந்தை நூறு ஆண்டு அளவு வாழ்ந்து, பெற்றோருக்கு அடிமையாய் இருந்து, மூன்று உலகிலுள்ள பொருட்கள் முழுவதையும் கொண்டு வந்து கொடுத்து, நியமப்படி தக்க வழிபாடு செய்தாலும், அவையெல்லாம் பெற்றோர், தம்மை ஒருநாள் வளர்த்தற்கு இணையாகாது.

அ. பெற்றோர் குழந்தையை ஒருநாள் வளர்த்தமைக்கு எவை ஈடாகா எனக் கவிஞர் கூறுகிறார்?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

ஆ. பின்வரும் சொற்களுக்கு ஒத்த பொருள் தருக.

பதில் உதவி - .................................................................................

குழந்தை - ..............................................................................

உலகம் - ...........................................................................

**03. கீழே தரப்பட்டுள்ள பொருத்தமான மரபுச் சொல்லின் கீழ்க் கீறிடுங்கள்.**

அ. ஒருவனின் மனத்தைப் புண்படும்படி சுட்டிக் காட்டுதல்.

1. பறையடித்தல்
2. தலையிடுதல்
3. செவிகொடுத்தல்
4. குத்திக்காட்டுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. ஒரு துறையில் திறமையான சாமர்த்தியம் உடையவன்.

1. கைச்சரக்கு
2. கொடிகட்டி
3. கைதேர்ந்த
4. தலைக்குமேல்

இ. மனத்தில் உறைக்கும் படியான வன்மையான கண்டனம்

1. சாதகபாதகம்
2. சாட்டைஅடி
3. சாவுமணி
4. சூடுசுரணை

ஈ. பலமுறை முயற்சி செய்து மேல்நிலைக்கு வருதல்

1. தலைதூக்குதல்
2. தோள்கொடு
3. தலைமுழுக்கு
4. நிறைகுடம்

உ. அவமானப்படும் விதத்தில் தோல்வி அடைதல்

1. ஊருக்கு உபதேசம்
2. கோட்டை கட்டுதல்
3. காவடியெடு
4. மண்ணைக் கவ்வுதல்

ஊ. ஒருவரின் எதிர்பார்ப்பு முற்றாக அழிதல்

1. தவிடுபொடி
2. ஆடிஅசைந்து
3. தலைவணங்கு
4. இரண்டுபட

**04. பின்வரும் தனிவாக்கியத் தொகுதி ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தொடர் வாக்கியமாகத் தொகுக்க.**

அ. மழை தூறுகின்றது. நான் ஒரு குடை கொண்டு செல்வேன்.

..........................................................................................

ஆ. எனக்குத் துன்பம் தருகிறாய். நான் உளங் கோணாதிருப்பேன்.

..........................................................................................

இ. இக் கடல் ஆழமானது. நீந்தப் பயப்படுகிறேன்.

..........................................................................................

ஈ. நீ உண்மை பேசுகின்றாய். நீ பொய் பேசவில்லை

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. அவன் கண்ணனை வடக்கே அனுப்பினான். அவன் பாலனைத் தெற்கே அனுப்பினான்.

..........................................................................................

**05. கீழ்க் காணும் உவமைச் சொற்றொடர்களின் பொருள் விளங்க வாக்கியங்களில் அமைக்குக.**

அ. இடியோசை கேட்ட நாகம் போல : ..........................................

..........................................................................................

ஆ. இலைமறை காய்போல : ..........................................

..........................................................................................

இ. கல்லில் நார் உரிப்பது போல : ..........................................

..........................................................................................

ஈ. பசுமரத் தாணிபோல : ..........................................

..........................................................................................

உ. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல : ..............................

..........................................................................................

**06. தரப்பட்டுள்ள இலக்கணச் சொற்களுக்குப் பொருத்தமான இலக்கணைத் தொடர்களை இனங்கண்டு தொடர்புபடுத்துங்கள்.**

| | |
|---|---|
| அ. படுகிடை | பொய்புரட்டு |
| ஆ. பிராணசங்கடம் | நான்குபக்கமும் |
| இ. தில்லுமுல்லு | மனம்மாறுதல் |
| ஈ. மனங்கோணுதல் | பெருந்துன்பம் |
| உ. சுற்றுமுற்றும் | எழுந்திருக்க முடியாதநிலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. **பொருத்தமான சொல்லை வைத்து வாக்கியத்தை நிறைவு செய்க.**

அ. அவ்வில்லில் பூட்டிய ...................... ஒடிந்தது. நேற்று ................ அவ்வூருக்குப் போனேன். **(நாண், நான்)**

ஆ. .................... இல்லாத நெஞ்சுடையான் கோழை எனப்படுவான். தவஞ் செய்வோனது ................ எல்லாஞ் சிதைந்துதேயும். **(திண்மை, தின்மை** (தீமை))

இ. என்கடன் அடியார்க்கு ...................... செய்து கிடப்பதே. அது ........................ கொட்டுகின்ற நெடுமலையாகும். **(பனி, பணி)**

ஈ. எடுத்த கருமத்தை முடித்தற்கு ............................ வேண்டும். துறவு பூண்டவனுக்கு ............................ இல்லை. **(உரவு** - வலிமை, மனோபலம்; **உறவு)**

உ. தனக்கு நிகர் இல்லை எனக் ........................ கொள்பவன் இடுக்கண் உறுவான். யான் ஒரு குற்றமும் செய்திலேனாயினும் அவன் என்மீது ............................ கொண்டான். **(கருவம்** - செருக்கு; **கறுவம்** - வெகுளி)

ஊ. குறிஞ்சி நில மகன் ....................................... எனப்படுவான். நன் மாணாக்கன் ................................ சொல்வழி ஒழுகுவான். **(குரவன்** - ஆசிரியன், தந்தை; **குறவன்)**

08. **பிறஉயிர்கள் மீது ஏன் இரக்கம் கொள்ள வேண்டும் இரண்டு வாக்கியம் தருக.**

......................................................................................................

......................................................................................................

......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகுப் பரீட்சை - 4

**01. தொடர் வாக்கியங்களைத் தனிவாக்கியமாக மாற்றி எழுதுங்கள்.**

அ. நாம் ஊன் உண்ண வேண்டும்; அன்றெனில் வாழ மாட்டோம்.

........................................................................................................

ஆ. அவன் சகோதரன் அவனுக்குப் பணங் கொடுத்தான்; அவன் சகோதரியும் அவனுக்குப் பணம் கொடுத்தாள்.

........................................................................................................

இ. பற்றுச் சீட்டை உடனே தரவேண்டும்; தராதுவிடின், பொருளைத் திரும்பத் தருக.

........................................................................................................

ஈ. அவன் தவறு செய்தான்; அதனாற் தண்டனைக்கு ஆளானான்.

........................................................................................................

உ. அவளின் மகன் நன்கு படித்தான்; அதனால் அவள் பெருமகிழ்ச்சி அடைந்தாள்.

........................................................................................................

### நான்கு கோடி

01. மதியாதார் முற்றம் மதித்தொரு காற்சென்று
மிதியாமை கோடி பெறும்.

02. உண்ணீர்உண் ணீரென்(று) உபசரியார் தம் மனையில்
உண்ணாமை கோடி பெறும்.

03. கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி பெறும்.

04. கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்.

- ஔவையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருஞ்சொற் பொருள்

1. **மதியாதார்** - தம்மைப் பெரியவராக எண்ணி வரவேற்காதவர்; **முற்றம்** - வீட்டுவாயில்; **ஒருகால்** (மீண்டும்) - ஒருமுறை; மதியாமை - செல்லாதிருப்பது.

2. **உண்ணீர்** - உண்ணுங்கள்; **உபசரியார்** - வற்புறுத்தி உண்ணுமாறு உபசாரம் செய்யாதவர்; **மனையில்** - வீட்டில்; **உண்ணாமை** - சாப்பிடாதிருத்தல்.

3. **கோடி** - மிகுதியான பொருள்; **குடி** - நல்ல குடும்பம்; **கூடுவது** - சேர்வது.

4. **கோடான கோடி** - பல கோடி, **நா** - நாக்கு; **கோடாமை** - (சொன்ன சொல்) தவறாமை.

**02. பொருளுணர்திறன் பயிற்சியூடாகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

அ. **எதை மிதியாமை கோடி பெறும்?**
1. உபசரியார் தம்மனை
2. குடிப்பிறந்தார் தம்மனை
3. மதியாதார் முற்றம்

ஆ. **குடிப் பிறந்தாரோடு கூடுவதற்கு .......................**
1. உண்ணீர் உண்ணீர் என உபசரிக்க வேண்டும்.
2. முற்றம் மிதிக்க வேண்டும்.
3. கோடி கொடுக்க வேண்டும்.

இ **சுருக்கமாக விடை தருக.**
1. எதை மிதியாமை கோடி பெறும்?

..........................................................................................

2. எங்கு உண்ணாமை கோடி பெறும்?

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. எந்நிலையிலும் எது கோடாமை கோடி பெறும்?

..........................................................................................

ஈ. தரப்பட்டுள்ள எதிர்மறைச் சொற்களுக்கு உடன்பாட்டுச் சொற்களை எழுதுக.

1. மதியாதார் - ........................................................
2. உபசரியார் - ........................................................
3. உண்ணாதார் - ........................................................
4. பேசாதார் - ........................................................
5. மிதியாதார் - ........................................................
6. நடக்காதார் - ........................................................

**03. கீழே தரப்பட்டுள்ள பாடலைப் படித்த பின்பு தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

## வெற்றியின் அடிக்கல்

**துணிவே துணையென்(று) ஆக்கி - வரும்**
**தோல்வி தனையும் தூக்கி**
**நினைத்ததைச் செய்வாய் நீயும் - வெற்றி**
**நேரில் வந்தே சாயும்!**

**பற்றிய ஏழ்மை மாய்த்து - லிங்கன்**
**பற்றிய பதவி கண்டோம்**
**வெற்றியை அடைய என்றும் - மண்ணில்**
**முயற்சியே அடிக்கல்லாகும்.**

**- கண்மதியன் -**

விளக்கவுரை

ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்த ஆபிரகாம் லிங்கன் தன் சுயமுயற்சியால் படித்துப் படிப்படியாக உயர்ந்தார். தோல்வி கண்டபோதும் தளராது முயன்று அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. வெற்றி எப்போது நேரில் வந்து சாயும்?

..........................................................................................

ஆ. வெற்றியை அடைய முயற்சியே அடிக்கல் என்பதைக் கவிஞர் எவ்விதம் விளக்குகின்றார்?

..........................................................................................

..........................................................................................

இ. இப்பாடலிலே குறிப்பிடப்பட்ட முயற்சியுடைய, வெற்றி கண்டவன் யார்?

..........................................................................................

**04. கீழேயுள்ள மெய்யெழுத்துக்களின் மூன்று வகைக்குரிய எழுத்துக்களை எழுதுங்கள்.**

அ. வல்லின மெய் - ..................................................

ஆ. மெல்லின மெய் - ..................................................

இ. இடையின மெய் - ..................................................

**05. தமிழ் எழுத்துக்கள் 247. அவற்றை வகைப்படுத்துங்கள்.**

அ. உயிரெழுத்து - ..................................

ஆ. மெய்யெழுத்து - ..................................

இ. உயிர்மெய்யெழுத்து - ..................................

ஈ. ஆய்த எழுத்து - ..................................

**06. புணர்ச்சி எழுத்து வகையால் நான்கு வகைப்படும். தரப்பட்டுள்ள உதாரணம் போன்று வேறு உதாரணம் தருக.**

அ. உயிர்முன் உயிர் = வாழை + இலை ..................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. உயிர்முன் மெய் = வாழை + பழம் ..............................

இ. மெய்முன் உயிர் = பொன் + ஒளி ..............................

ஈ. மெய்முன் மெய் = பொன் + தாலி ..............................

**07. கீழே தரப்பட்ட சொற்களுள் பொருத்தமானதைத் தெரிந்து கோடிட்ட இடங்களில் நிரப்புக.**

வாழை மரம் மிகவும் .......................... வளரும். அதன் மேல் பட்டைகள் .................................. படிந்து இருக்கும். அந்தப் பட்டைகளின் உட்பக்கத்தில் ...................... இருக்கும். வாழை மரத்துக்கு ............................ இல்லை. சிறு பள்ளம் தோண்டி வாழைக் குட்டியை நட்டுத் .......................... ஊற்றி வளர்க்க வேண்டும். அது முதலில் ............................ விடும்.

| |
|---|
| **(விதை, செழிப்பாக, தண்டு, குருத்து, ஒன்றின் மேல் ஒன்றாகப், தண்ணீர்)** |

**08. 'தாயின் பெருமை' பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுங்கள்.**

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகுப் பரீட்சை - 5

### விவேகி யார்?

ஒருத்தி அழகும் விவேகமும் உள்ள ஒருவனை விவாகம் செய்ய வேண்டுமென்று வெகுநாளாகக் காத்திருந்தாள். ஒருநாள் அழகுள்ள புருஷன் ஒருவன் அங்கு வந்தான். அவன் விவேகியோ? என்று அறியும் பொருட்டு அவனோடு பேசிக் கொண்டிருந்தாள். அப்பொழுது அங்கே 'சடசட' என்றது. அவன், 'அது என்ன?' என்றான். அது உடும்பு என்றாள். 'அதில் ஓரிறகு பிடுங்கி வா; காது கடைதல் வேண்டும்' என்றான் அவன். 'உடும்புக்கு இறகு இருக்குமா? போ' என்று அவனை அனுப்பி விட்டாள். சிலநாள் சென்ற பின் வேறொருவன் வந்தான். அவனுடனே 'முன் ஒரு மூடன் உடும்பிலே இறகு பிடுங்கி வரச்சொன்னான்' என்றாள். அதற்கு அவன் சிரித்து 'அவன் ஆமை என்று நினைத்தான் போலும்!' என்றான். இவன் அவனிலும் பெருமூடன் என்று எண்ணி, இவனையும் இகழ்ந்து போகச் சொன்னாள்.

- நாவலர் பெருமான் -

**01. மேலே தரப்பட்டுள்ள கதையைப் படித்த பின்பு வினாக்களுக்கு விடை தருக.**

அ. ஏன் ஒருத்தி நீண்ட நாளாக விவாகம் செய்யாதிருந்தாள்?

......................................................................................................

ஆ. முதலாவதாக வந்தவன் மூடன் என்பதை அவள் எவ்வாறு அறிந்தாள்?

......................................................................................................

......................................................................................................

இ. இரண்டாவதாக வந்தவன் முன்னையவனிலும் பெருமூடன் என அவள் எவ்விதம் அறிந்தாள்?

......................................................................................................

......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் சிந்தனை

**அறிவியல் சிந்தனை அறிவை வளர்க்கும்**
**ஆற்றலும் அறிவும் உலகை இணைக்கும்**
**அருந்தமிழ் மொழியில் அறிவியல் சிறந்தால்**
**ஆழ்கடல் கடந்தும் நம்மொழி நிலைக்கும்!** 1

**மருத்துவம் பொறியியல் தகவல் நுட்பம்**
**மன்பதை காக்கும் வேளாண் அறிவியல்**
**உறவை வளர்க்கும் கணிப்பொறி படைப்புகள்**
**உன்னால் மேலும் உருப்பெறச் செயற்படு.** 2

- கவிஞர் செம்பை சேவியர் -

02. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

அ. உலகை இணைப்பவை ...........
1. அறிவியலும் சிந்தனையும்
2. ஆற்றலும் அறிவும்
3. அறிவும் வளர்ச்சியும்

ஆ. ஆழ்கடல் கடந்தும் தமிழ்மொழி நிலைக்க
1. தமிழ்மொழியில் சிந்தனை சிறக்க வேண்டும்.
2. தமிழ் மொழியில் அறிவியல் சிறக்க வேண்டும்.
3. தமிழ் மொழியைக் கடல் கடந்து பரப்ப வேண்டும்.

இ. உலகை இணைக்க வழி யாது?

..........................................................................................................

ஈ. தமிழ்மொழி நிலைக்க வழி யாது?

..........................................................................................................

உ. இளைஞர்கள் எவ்வெத்துறைகளை உருப்பெறச் செய்ய வேண்டும்?

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. பொருத்தமான சொல்லின் கீழ்க் கீறிடுங்கள்.

அ. நெல்லின் வித்து மணிபோல ஆமணக்கின் வித்து
1. முத்து 2. விதை 3. மணி 4. பருப்பு

ஆ. **பம்பரமாட்டுதல்** என்ற மரபுத் தொடர் தரும் பொருள்
1. தன்வயப்படுதல் 2. வசப்படுமாறு பேசுதல்
3. சாக்குப்போக்குச் சொல்லுதல் 4. அலைக்கழித்தல்

இ. பாம்பு சீறுவது போல பூனை
1. கத்தும் 2. அலறும்
3. சீறும் 4. கதறும்

ஈ. எருதுக்குப் பசுப்போல கடுவன் என்பதற்கு
1. மறி 2. பெட்டை 3. நாகு 4. பிணை

உ. கடவுள் இருக்கிறார் என நம்புபவன் .................. எனப்படுவான்.
1. சிறுபட்டி 2. நாத்திகன்
3. ஆத்திகன் 4. பக்தன்

ஊ. அந்த வாலிபன் வாட்ட சாட்டம் உடையவன். இங்கு வாலிபன் என்பதற்கு எதிர்ப்பாற் சொல்
1. வாலிபள் 2. வாலிபி
3. வாலை 4. காளை

## 04. நீண்ட வாக்கியப் பொருளுக்கு ஒரு சொற்பெய்து எழுதுக.

**(உ-ம்)** அரண்மனைகளிலே மகளிர் தங்குவதற்குரிய தனியிடம் - **அந்தப்புரம்**

அ. தனக்கே உரிமையாக முழுப்பொருளையும் அனுபவித்தல்.

........................................................................................................

ஆ. சொத்தை அநுபவிக்கும் உரிமையுடன் கூடிய அடைமானம்

........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன்.

.............................................................................................

ஈ. ஒருவன் தன்னைப் பற்றி எழுதும் வரலாறு

.............................................................................................

உ. நூறாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா

.............................................................................................

## வேளாண்மை

மனிதர்கள் பலவகை இன்பங்களையும் பெற்று அநுபவித்தற்கு ஏதுவாகிய பொருளைச் சம்பாதித்தற்குரிய நெறிகள் அநேகம் இருக்கின்றன. அவை வேளாண்மை, வியாபாரம், இராச சேவை, சிற்பம் முதலியவை. பிறதொழில்களினாலே சம்பாதிக்கும் பொருளைக் கொண்டு முதலில் நாம் தேடிக் கொள்வன நெல் முதலாகிய உணவுப் பொருட்களே ஆதலாலும், அவைகள் வேளாண்மையினாலன்றி வேறொன்றினாலும் வருதல் கூடாமையினாலும், வேளாண்மை செய்வோர் தாம் பிறரிடத்துச் சென்று இரவாதும் தம்மிடத்து வந்து இரந்தவர்களுக்கு இல்லை என்னாதும் கொடுக்கும் பெருந்தன்மையினாலும், பொய் முதலிய பாவக் கலப்பில்லாமையினாலும், உயிர்ப் பாதுகாப்புக்கு இன்றியமையாத வேளாண்மை மற்றை எத்தொழில்களினுஞ் சிறந்தது.

**05. மேலே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்த பின்பு வினாக்களுக்கு விடை தருக.**

அ. மக்கள் பொருளைச் சம்பாதிப்பதற்குரிய நெறிகள் எவை?

.............................................................................................

ஆ. மனிதர் முதலில் தாம் தேடிக் கொள்ளும் பொருள் எது?

.............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. வேளாண்மை மற்றை எத்தொழிலிலும் சிறந்தது என்பது எவ்விதம் ஆசிரியரால் நிரூபிக்கப்பட்டுள்ளது?

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

**06. அடைப்புக்குள் உள்ள பொருத்தமான சொல்லைத் தெரிந்தெடுத்து நிரப்புங்கள்.**

அ. அறிவிலார் சொல்லும் ........................ வார்த்தையைக் கல்விமான்கள் பொறுப்பர். **(புகழ், நிந்தை)**

ஆ. பெற்றோரை ஆதரிக்காதவன் .............................. புகுவதில்லை. **(நரகம், சுவர்க்கம்)**

இ. மனத்தினது தூய்மை மக்களுக்கு .................................. தரும். **(கேடு, ஆக்கம்)**

ஈ. ஊன் உண்பவருக்கு ..................................... ஆட்சி இல்லை. **(அருள், மருள்)**

உ. ........... முகமுள்ள குரங்கு ஒன்றாயினும் காணக் கிடைக்கவில்லை. **(நல்ல, கெட்ட)**

ஊ. கொடுக்கக் கொடுக்கச் .............................. பெருகும். **(வறுமை, செல்வம்)**

**07. தரப்பட்ட பேதச்சொற்களை உரியபடி பொருத்தமாக இடைவெளிகளில் வைத்து நிரப்புங்கள்.**

அ. நெல் செழிக்கக் ..................... பிடுங்குவர். பல ..................... கற்றுத் தேறினான் பாலன். **(கலை, களை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. மேய்ந்த மாட்டைக் ............................. மனிதன் இவனே.
ஓடிக் ............................. இளைஞனுக்கு மூச்சுத் திணறிற்று.
**(களைத்த, கலைத்த)**

இ. கூட்டங் ......................... பின்னரே நான் அங்கு சென்றேன்.
தன் குற்றங் ................. பின்னரே பிறர் குற்றம் நீக்க முயலலாம்.
**(களைத்த, கலைந்த)**

ஈ. சேனைத் தலைவன் ...................... எதிரியைத் தோற்கடித்தான்.
.......................... கொண்டு அரிசியைப் புடைப்பர்.
(**குல்லம்** - முறம், **குள்ளம்** - தந்திரம்)

உ. .................... உண்டு வாழ்வது இகழ்ச்சியைத் தரும். தீமை செய்வோர் பிறந்து .................... உழலுவர். **(இரந்து, இறந்து)**

**08. மரபுச் சொற்களைத் தொடர்புபடுத்துங்கள்.**

| | |
|---|---|
| அ. அரிசி என்பது | பலா, தோடை |
| ஆ. சுளை என்பது | முருங்கை, கற்றாளை |
| இ. சோறு என்பது | நெல், தினை |
| ஈ. பருப்பு என்பது | மாதுளை |
| உ. முத்து என்பது | கடலை, பயறு |
| ஊ. விதை என்பது | மிளகாய், கத்தரி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. வேற்றுமைகள்

| | | உருபு | வேற்றுமை |
|---|---|---|---|
| 1. | வேலன் பாடினான் | - | எழுவாய் வேற்றுமை |
| 2. | வேலனைக் கண்டேன் | ஐ | இரண்டாம் வேற்றுமை |
| 3. | வேலனால் நிறைவேறியது | ஆல் | மூன்றாம் வேற்றுமை |
| 4. | வேலனுக்குக் கொடு | கு | நான்காம் வேற்றுமை |
| 5. | வேலனின் நல்லவன் | இன் | ஐந்தாம் வேற்றுமை |
| 6. | வேலனது புத்தகம் | அது | ஆறாம் வேற்றுமை |
| 7. | வேலன் கண் உள்ளது | கண் | ஏழாம் வேற்றுமை |
| 8. | வேலா! வா | விளி | எட்டாம் வேற்றுமை |

அ. வேற்றுமை எத்தனை வகைப்படும்? அவை எவை?

.......................................................................................................

ஆ. விளி வேற்றுமை என்பது எது?

.......................................................................................................

இ. பின்வருவன எத்தனையாம் வேற்றுமை, அதன் உருபு என்பவற்றைத் தருக.

| | உருபு | வேற்றுமை |
|---|---|---|
| 1. மன்னனது கை | .......... | ............... |
| 2. இராமனது புத்தகம் | .......... | ............... |
| 3. மாணவரது ஒழுக்கம் உயரவேண்டும் | .......... | ............... |
| 4. பெட்டியின் கண் பணம் உள்ளது | .......... | ............... |
| 5. மரத்தின் கண் கூடு இருந்தது | .......... | ............... |
| 6. அதர்மம் ஒழிக! | .......... | ............... |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாந் தவணைப் பரீட்சை

## அலகுப் பரீட்சை - 6

01. கீழே தரப்பட்டுள்ள பாடலைப் படித்த பின்பு தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

**சுற்றுச் சூழல் காத்திடுவோம்**
**சுகமாய் வாழவழிவகுப்போம்**
**வெற்று வார்த்தை இதுவல்ல**
**விளையும் நன்மையோ பலப்பல**

**கண்ட பொருளை எரிப்பதனால்**
**காற்று மாசு அடைகிறது**
**அண்ட வெளியில் ஓசோனும்**
**அதிகம் பாதிப்பு அடைகிறது**

**கொதிக்க வைத்தே பிறகேதான்**
**குடிநீர் குடிப்பது நலமாகும்**
**எதற்கும் விழிப்பாய் இருந்தாலே**
**எல்லா நம்மையும் கிடைத்திடுமே**

- பி.வி.கிரி -

அருஞ்சொற் பொருள்

**வெற்று வார்த்தை** - பயனற்ற வார்த்தை; **அண்டவெளி** - வானவெளி; **ஓசோன்** - பூமிக்குமேல் 12 கி.மீ முதல் 45 கி.மீ வரையுள்ள வாயுப்படுக்கை.

